Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

விலை : ரூபா 20.00

செய்தி - 36 | ஜூன் 04-10, 2016 | பக்கம் - 20

உள்ளே...

காதல் - கல்யாணம் ஓர் அலசல் .... பக்.5

கொரில்லாவிடம் சிக்கிய சிறுவனின் திகில் நிமிடங்கள் ... பக். 6

# நினைவுச்சின்ன அறிவிப்புப் பலகையை கழற்றிச் சென்ற விஷமிகள்




(முல்லைத்தீவு)

முள்ளிவாய்க்காலில் இறந்த எங்கள் சொந்தங்களுக்கு "இங்கே நினைவுச் சின்னம் அமைக்கவுள்ளோம்," என்று அறிவிக்கும் விளம்பரப் பலகையை இனந் தெரியாத விஷமிகள் பிடுங்கி எடுத்துச் சென்று விட்டார்கள்.

அதுமாத்திரமன்றி தினச்செய்தி நினைவுத் தூபி அமைக்கப் போகிறது என்ற பலகையை முள்ளிவாய்க்கால் சந்தியில் கட்டித் தொங்க விட்டிருந்தோம். அதனையும் அறுத்துச் சென்று விட்டார்கள் இந்த விஷமிகள். இதனை தினச்செய்தி வன்மையாகக் கண்டிக்கிறது.

இது சம்பந்தமாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (பொறியியலாளர்) கருணாசேன ஹெட்டியாராச்சிக்கு 'தினச்செய்தி' தொலைநகல் மூலம் அறிவித்துள்ளது.

இது சம்பந்தமாக பொருளியலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சிக்கு தினச்செய்தி ஆசிரியர் அனுப்பி வைத்த தொலைநகலில் வருமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. "யுத்தத்தில் இறந்த எமது சொந்தங்களுக்கு" ஓர் நினைவுத் தூபியும், பிரார்த்தனை மண்டபமும் முள்ளிவாய்க்காலில் தனியார் காணியில் நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளோம்.

பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன, யாரும் யுத்தத்தில் "இறந்த சொந்தங்களுக்கு குறிப்பாக சாமான்ய மக்களுக்கு நினைவுச் சின்னங்கள் நிறுவி அவர்களின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்தனை செய்யலாம்," என சென்ற மாதம் 12 ஆம் திகதி பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்திருந்தார். இந்த நினைவுத் தூபியையும், பிரார்த்தனை மண்டபத்தினையும் தனியார் காணியில் கட்டுவதென்று முடிவு செய்திருந்தோம்.

02 இல்

# வழிப்பறிக் கொள்ளையரின் சொர்க்க பூமியா செம்மணி வீதி ?




(யாழ்ப்பாணம்)

செம்மணி - நல்லூர்வீதி திருடர்களின் சொர்க்க பூமியாக மாறிவருகிறது. சென்ற மாதம் மாத்திரம் மூன்று வழிப்பறிக் கொள்ளைகள் நடைபெற்றுள்ளதாக பொலிஸாருக்கு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் முறைப்பாடுகள் இல்லாமல் எத்தனை வழிப்பறிக் கொள்ளைகள் நடந்ததோ தெரியவில்லை.

சாவகச்சேரியிலிருந்து செம்மணி வீதியால் வந்த ஆசிரியர் ஒருவரை முகமூடியணிந்து உந்துருளியில் வந்த இருவர் எட்டுப் பவுண் தாலிக் கொடியை பறித்துச் சென்றதுடன், அவரது உந்துருளியையும் பறித்துச் சென்று விட்டார்கள்.

18 இல்

# கே.பி. மீதான விசாரணை நடாத்துவதா இல்லையா ஜூலை 25 இல் முடிவு



(கொழும்பு)

கே. பி. என்று அழைக்கப்படும் குமரன் பத்மநாதனை கைது செய்து அவருக்கு எதிராக விசாரணைகள் நடாத்துவதா இல்லையா என்ற விடயம் பற்றி எதிர்வரும் யூலை 25 ஆம் திகதி மேல்முறையீட்டு நீதிமன்றம் முடிவெடுக்கும்.

தமிழீழ விடுதலை புலிகளின் முன்னாள் ஆயுத கொள்வனவாளர் குமரன் பத்மநாதனை கைது செய்து விசாரணைகள் நடத்த வேண்டும் என்று ஜே.வி.பி. இன் பிரசாரச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் ரிட் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தா.

02 இல்

# சைவக் கோயில்களில் மிருகபலிக்கு தடை

(கொழும்பு)

சைவக் கோயில்களில் மிருகங்களை பலியிடுவதை பூரணமாக தடை செய்ய திட்டமிட்டுள்ளது. இதற்கான சட்ட வரைபு ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது.

சிறைச்சாலை சீர்திருத்தம் மீள்குடியேற்றம் புனர்நிர்மாணம் மற்றும் இந்து மத அலுவலக அமைச்சு சைவக்கோயில்களில் ஆடு மாடு போன்ற மிருகங்களையும் கோழி போன்ற பறவைகளையும் பலியிடுவதற்கு பூரணமாக தடை செய்வதற்கு திட்டமிட்டு சட்டவரைபுகள் அமைத்து இது சம்பந்தமாக மந்திரி சபையின் அங்கீகாரத்தை பெறுவதற்கு அதற்கான தீர்மானங்களை சமர்ப்பிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.


யாழ்ப்பாண கோயில்களில் மிருகங்களை வெட்டி வேள்வி நடத்துவதற்கு ஏற்கனவே சென்ற மார்ச் மாதம் 26 ஆம் திகதி யாழ் மேல் நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது குறிப்பிடதக்கது.

யாழ்ப்பாணத்தில் உள்ள சில கோயில்களில் மிருகபலி கொடுத்து நடத்தப்படும் வேள்வியை உடனடியாக நிறுத்துமாறு கோரி அகில இலங்கை சைவ மகா சபைத் தலைவர் சிவக்கொழுந்து சோதிமுத்து யாழ் மேல் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

இந்த மனு சென்ற 26 ஆம் திகதி மார்ச் மாதம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது யாழ் மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

18 இல்

## கொண்டோடிச் சுப்பர்




உண்மைகளை உரத்துக் கூறும் உரிமைக் குரல் - என்றும் உங்களுடன்

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636

தொலைநகல் : 021 2242139

இணையதளம் : www.thinacheithi.com/lk


## கிழக்கு மாகாண முதலமைச்சரும் – தமிழரும்

மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பதைப்போலத் தான் கிழக்கு மாகாண முதலமைச்சரின் பிரச்சினை உருமாறியுள்ளது.

சென்ற மே 20 ஆம் திகதி சம்பூர் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியின்போது கிழக்கு மாகாண சபை முதலமைச்சர் ஹபீஸ் நஷீர் அஹமட் கடற்படை அதிகாரி ஒருவரை ஆங்கிலத்தில் வன்மையாகத் திட்டினார்.

அதையடுத்து ஏற்பட்ட எதிர்ப்புக்கள், கண்டனங்கள் ஆகியவற்றிற்கு அவர் முகம் கொடுக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இந்த விடயத்திற்கு முடிவு கட்டும் வண்ணம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்ரமசிங்க மற்றும் அந்த கடற்படை அதிகாரி ஆகியோருக்கு மன்னிப்பு கோரும் கடிதம் ஒன்றை அவர் அனுப்பி வைத்தார். அதனையடுத்து இந்தப் பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்தது. ஆனால் இந்தப் பிரச்சினை நீறுபூத்த நெருப்புப் போல கனன்று கொண்டே தான் இருக்கின்றது.

மே 20 ஆம் திகதி நிகழ்ச்சியையடுத்து மே 26 ஆம் திகதி பாதுகாப்பு படையினர் வருங்காலத்தில் கிழக்கு மாகாணசபை முதலமைச்சர் பங்குபற்றும் நிகழ்ச்சிகள் எதிலும் தாம் பங்குபற்றுவதில்லை என்றும், தமது படைப்பிரிவு வளவுக்குள் அனுமதிப்பதில்லை எனவும் அறிவித்தனர்.

பின்னர் தாங்கள் முதலமைச்சருக்கு எதிராக விதித்த தடைகளை ரத்துச் செய்வதாக முப்படைகளும் மே 30 ஆம் திகதி அறிவித்தன. இவ்வாறு அறிவித்திருந்த போதிலும் பதில் கூறமுடியாத வினாக்கள் பல இப்பொழுதும் வந்து கொண்டே இருக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள கிண்ணியாவில் நடந்த நிகழ்ச்சி ஒன்றில் மாகாண ஆளுநர் அஸ்ரின் பெர்ணாண்டோவுடன் பங்குபற்றினார். அந்த நிகழ்ச்சியில் அமெரிக்க தூதுவர் அதுல் ஹெஷப்பும் பங்குபற்றினார். அதையடுத்து திருகோணமலை மாவட்டத்திலுள்ள சம்பூர் மகாவித்தியாலயத்தில் விஞ்ஞான கூடம், கணினிக் கூடம் திறப்பு விழாவிற்குச் செல்ல வேண்டியிருந்தது. கிண்ணியாவிலிருந்து சம்பூருக்கு ஹெலிகொப்ரர் மூலம் செல்ல ஆளுநர் ஏற்பாடு செய்திருந்தார்.

சம்பூர் நிகழ்விற்கு முதலமைச்சரை வருமாறு அழைத்த ஆளுநர் முதலமைச்சருக்கு ஹெலியில் இடம் இல்லை என கூறி விட்டார். அதனையடுத்து முதல்வர் தனது மோட்டார் வாகனத்தில் சம்பூர் சென்றார்.

அந்த நிகழ்ச்சிக்குச் சென்ற ஆளுநர் மற்றும் அமெரிக்க தூதுவர் ஆகியோரை மேடைக்கு வருமாறு அழைத்தார்கள். ஆனால் முதலமைச்சரை அழைக்கவில்லை. அவரை மேடைக்கு வருமாறு ஆளுநர் அழைத்தார். அழைப்பை ஏற்று மேடையில் ஏறச் சென்ற முதலமைச்சரை நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கிய கடற்படை அதிகாரி தடுக்க முற்பட்டார். அவ்வாறு தடுக்க முற்பட்ட கடற்படை அதிகாரியை முதலமைச்சர் ஆங்கிலத்தில் “நீயார் என்னைத் தடுப்பதற்கு” என்று ஆளுநர், அமெரிக்க தூதுவர் முன்பு திட்டியுள்ளார். இதையடுத்து இந்த பிரச்சினை பூதாகரமாக வெடித்தது. சிங்கள, ஆங்கில ஊடகங்கள் முதல்வருக்கு எதிராக கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டன.

அதேநேரத்தில் தமிழ் ஊடகங்கள் முதலமைச்சருக்கு ஆதரவு தெரிவித்து அறிக்கைகளை வெளியிட்டன. அண்மையில் தமிழ்த்தேசிய கூட்டணியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா குறிப்பிடுகையில் சம்பூர் சம்பவத்தைக் காரணம் காட்டி கிழக்கு மாகாண முதலமைச்சரின் அதிகாரங்களை எவரும் பறிக்கக் கூடாது எனக் கூறியுள்ளார். தமிழ்த்தேசியக் கூட்டணி கிழக்கு மாகாண முதலமைச்சருக்கு ஆதரவாக இருப்பது ஓரளவு நிம்மதியை அளிக்கின்றது.

சரியோ - பிழையோ கிழக்கு மாகாண முதலமைச்சருடன் தமிழர்கள் ஆதரவாக இருக்க வேண்டும் என்றுதான் தினச்செய்தியும் விரும்புகிறது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## நினைவுச்சின்ன ...

இதற்கான காணியை முள்ளிவாய்க்காலைச் சேர்ந்த திரு. அமிர்தலிங்கம் அன்பளிப்புச் செய்திருந்தார்.

அதனையடுத்து ஏ35 வீதியில் அமைந்துள்ள அந்த தனியார் காணியில் நினைவுத் தூபி அமைக்கப் போகின்றோம் என்று ஒரு விளம்பரப் பலகையை நாட்டியிருந்தோம்.

அந்த விளம்பரப் பலகையை சென்ற மே 23 ஆம் திகதி தினச்செய்திக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் நாட்டியிருந்தோம். அவ்வாறு நாட்டிய பொழுது கூட்டத்தோடு கூட்டமாக அரச உளவு அதிகாரிகள் சிலரும் நின்றதை நாம் அவதானித்தோம். அதனையடுத்து மே 27 ஆம் திகதி யாரோ விஷமிகள் அந்த விளம்பரப் பலகையை கழற்றிச் சென்று விட்டார்கள்.

இந்த நடவடிக்கையானது கண்டனத்திற்கும், வேதனைக்குமுரிய செயலாகும். தனியார் காணிக்குள் எமது அனுமதியின்றி உட்பிரவேசித்து அந்த விளம்பரப் பலகையை கழற்றிச் சென்றது ஒரு கிரிமினல் குற்றமாகும்.

அதனையடுத்து சென்ற திங்கட்கிழமை (30) தினச்செய்தியின் ஆசிரியரும், திரு. அமிர்தலிங்கமும் முல்லைத்தீவு கட்டளைத் தளபதியின் கவனத்திற்கு இந்த விடயத்தைக் கொண்டு சென்றோம்.

அப்பொழுது தனது கட்டுப்பாட்டில் இருக்கும் இராணுவத்தினர் யாருமே இவ்வாறான செயலைச் செய்யவில்லை என மேஜர் ஜென்ரல் உப்புள் விதானகே கூறினார்.

மேலும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு தினச்செய்தி அனுப்பி வைத்த தொலைநகலின் பிரதி ஒன்றையும் முல்லைத்தீவு கட்டளைத் தளபதிக்குக் கையளித்தோம்.

அவர் இவ்விடயம் தொடர்பாக இராணுவத் தளபதியின் கவனத்திற்குக் கொண்டு செல்வதாக உறுதியளித்தார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## கே.பி. ...

அந்த மனு விசாரணைக்கு வந்தபொழுது சொலிசிற்றர் ஜெனரல் சுகதா கமலத் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் போதிய தகவல் கிடைக்கவில்லை என்று நீதியரசர்கள் எ.எம்.ஏச்.டி. நவாஸ் மற்றும் விஜிதா மலகொடயிடம் தெரிவித்தார்.

அதையடுத்து சென்ற பெப்ரவரி 15 ஆம் திகதி மேல்முறையீட்டு நீதிமன்றம் குடிவரவு குடியகல்வு திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு அனுப்பி வைத்த உத்தரவில் குமரன் பத்மநாதன் நாட்டை விட்டு தப்பி செல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார்கள்.

இந்த வழக்கில் பிரதிவாதிகளாக இராணுவத் தளபதி பொலிஸ்மா அதிபர் மற்றும் குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டு நாயகம் ஆகியோர் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு மீண்டும் 2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்பட்ட பொழுது குமரன் பத்மநாதனுக்கு எதிராக எந்தவிதமான சாட்சியங்களும் இதுவரை கிடைக்கவில்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்தது. அதை அடுத்து அண்மையில் சென்ற 30 ஆம் திகதி இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட பொழுது குமரன் பத்மநாதனுக்கு எதிராக எந்த விதமான சாட்சியங்களையும் சட்டமா அதிபர் திணைக்களம் தாக்கல் செய்யாததை அடுத்து இந்த வழக்கை பதிவு செய்த வழக்காளியான ஜனதா விமுக்தி பெரமுனவின் பிரச்சார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் இந்த வழக்கை தொடர்ந்து நடத்த விரும்புகிறாரா? கைவிடுகிறாரா? என தெரிவிக்க வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கை மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் விஜிதா கே. மணல்கொட, பத்மன் சூரசேன ஆகிய இருவர் அடங்கிய பெஞ்சு விசாரித்து வருகிறது.

ஏற்கனவே இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட குமரன் பத்மநாதனுக்கெதிராக எந்தவிதமான சாட்சியங்களும் இல்லை என சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து விட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

வழக்காளியான விஜிதாஹேரத் சார்பில் உபுல் குமார பெரும, சுனில் வட்டகொட, கௌசல்ய பெரேரா, தனுக்கா நந்த ஸ்ரீ, ஜெயந்த ஹெற்றிகே, றெசானி ஜெயசூரிய ஆகிய சட்டத்தரணிகள் ஆஜரானார்கள்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## சைவக் ...

உள்ளூராட்சி அமைச்சு செயலாளர், சங்கானை, உடுவில், சண்டிலிப்பாய் ஆகிய பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிப்பாளர், வடமாகாண சுகாதார அமைச்சு செயலாளர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோரை எதிர் மனுதாரர்களாக குறிப்பிட்டிருந்தார்கள்.

இறைச்சிக்கடை சட்டத்தின் கீழ் ஆடு, மாடு, கோழி வெட்டுவதற்கான அனுமதி வழங்குவதால் ஆலயங்களுக்கும் வழங்குவது சரியானதா என்றும் - மிருக பலிகொடுத்து வேள்வி நடத்தும் தர்மகர்த்தாக்கள் கோயில்கள் நடாத்துகிறார்களா? இறைச்சிக் கடை நடாத்துகிறார்களா? என்றும் கேள்வி எழுப்பினார் இளஞ்செழியன்.

அத்துடன் மிருகபலி நடத்துவதற்கு அனுமதி கோரினால் அதற்கு அனுமதி வழங்கக் கூடாது என்றும் வடமாகாண அனைத்து பிரதேச சபைகளுக்கும் சுகாதார வைத்திய அதிகாரிகளுக்கும் சுகாதாரசேவைகள் பணிப்பாளருக்கும் மற்றும் சுகாதார அமைச்சு சேவைகளுக்கும் நீதிபதி இளஞ்செழியன் உத்தரவிட்டிருந்தார்.

மேலும் நீதிபதி உத்தரவுக்கு முரணாக எந்த ஆலயத்தில் மிருகபலி வேள்வி நடத்தப்பட்டாலும் அந்த ஆலய தர்மகத்தா மற்றும் உறுப்பினர் அனைவருக்கும் எதிராக மனு தாக்கல் செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என இளஞ்செழியன் கட்டளை பிறப்பித்துள்ளார்.

இதேவேளை இந்த உத்தரவை ரத்து செய்து வருடாந்த வேள்வி நடாத்த அனுமதி கோரி கரு கம்பனை கவுணாவத்தை நரசிம்ம வைரவர் ஆலய நிர்வாகத்தினர் மல்லாகம் நீதிமன்றத்தில் மனு ஒன்றை தாக்கல் செய்திருந்தார்கள். அந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மல்லாக நீதிமன்ற நீதவான் ஏ. யூட்சன் மேல்நீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவை ரத்து செய்யமுடியாது என உத்தரவு பிறப்பித்தார்.

## தமிழக சபாநாயகர், துணை சபாநாயகர் ஒருமனதாக தேர்வு

தமிழக சட்டசபை சபாநாயகர் பதவிக்கு தனபாலும், துணை சபாநாயகர் பதவிக்கு பொள்ளாச்சி ஜெயராமனும் அ.தி.மு.க. சார்பில் வேட்பாளராக அறிவிக்கப்பட்டனர்.

அதையடுத்து தனபாலும், பொள்ளாச்சி ஜெயராமனும் வேட்புமனு தாக்கல் செய்தனர். அவர்களை எதிர்த்து யாரும் மனு தாக்கல் செய்யவில்லை.

எனவே சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகரை தேர்வு செய்ய சட்டசபை கூடியது. சபாநாயகராக தனபாலும், துணை சபாநாயகராக பொள்ளாச்சி ஜெயராமனும் ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சபாநாயகர் தனபாலை அவரது இருக்கையில் அவை முன்னவர் ஓ.பன்னீர்செல்வம், எதிர்க்கட்சி தலைவர் மு.க. ஸ்டாலின் ஆகியோர் அமர வைத்தனர்.

அவர்கள் இருவரையும் வாழ்த்தி அவை முன்னவர் ஓ.பன்னீர்செல்வம் பேசினார். புதிய சபாநாயகர் தேர்வு செய்யப்பட்டதையடுத்து தற்காலிக சபாநாயகர் செம்மலை விடை பெற்றார்.

# யாழ் போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களின் பகல் கொள்ளை




(யாழ்ப்பாணம்)


யாழ்போதனா வைத்தியசாலையில் கடமை புரியும் வைத்திய நிபுணர்களுக்கு யாழ்ப்பாணத்தில் "அள்ளு காசும், தென்னம் பிள்ளையும்." போதனா வைத்திய சாலையில் வேலை செய்யும் நிபுணர்கள் அங்கே என்ன செய்கிறார்களோ தெரியவில்லை. சதா அங்கு செல்லும் நோயாளர்கள் தவறான முறையில் வைத்தியம் செய்யப்பட்டு இறந்து போகிறார்கள் என்ற விடயம் தொடர்ந்து கசிந்து கொண்டிருக்கின்றது. ஆனால் இந்த போதனா வைத்தியசாலையில் கடமைபுரியும் வைத்தியர்கள் தனியார் வைத்திய நிலையங்களில் மாலை நான்கு மணி முதல் இரவு பன்னிரெண்டு மணி வரை கடமை புரிந்து தினசரி ஒரு லட்சம் வரை உழைக்கிறார்கள் எனத் தெரியவருகிறது.


திருநெல்வேலி நொதேர்ண் சென்றல் வைத்தியசாலை ஒரு தனியார் வைத்தியசாலை. அந்த வைத்தியசாலைக்கு தினசரி 30 வைத்திய நிபுணர்கள் வருகிறார்கள். மருந்து கொடுக்கிறார்கள், சத்திர சிகிச்சையும் செய்கிறார்கள். இங்கு ஒரு நோயாளரைப் பார்ப்பதற்கு ரூபா 1200 தொடக்கம் 1500 வரை அறவிடுகிறார்கள். இவ்வாறு அறவிடப்படும் பணத்தில் 75 வீதமான பணம் இந்த வைத்திய நிபுணர்களுக்கே போகின்றது. சில வைத்திய நிபுணர்கள் மாலை நான்கு மணி தொடக்கம் பன்னிரெண்டு மணிவரை 100 தொடக்கம் 150 நோயாளர்களைப் பார்வையிடுகிறார்கள். அதனைவிட சுன்னாகத்தில் உள்ள ஒரு சில வைத்திய நிலையங்களான மொடேண் ஹெல்த் சிற்றி, மெடி செக் ஹெல்த் கிளினிக் ஆகியன சினிமாவிற்கு விளம்பரப்படுத்துவது போல தமது கிளினிக்குக்கு வரும் வைத்தியர்களின் பெயர்களை விளம்பரப் பலகைகளில் எழுதி வீதியோரங்களில் வைத்துள்ளார்கள். அதேபோல் நெல்லியடி, சாவகச்சேரி மற்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள இதர தனியார் வைத்தியசாலைகளுக்கு வைத்திய நிபுணர்கள் செல்கின்றனர். மாலை 4 மணி தொடக்கம் இரவு 12 மணி வரை தனியார் வைத்தியசாலைகளுக்கு குரங்கு கொப்புக்குக் கொப்பு தாவுவதைப் போல இவர்களும் மாறி மாறி சென்று கொண்டே இருக்கின்றார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள அநேக வைத்திய நிபுணர்கள் ஒரு மாதத்திற்கு சராசரியாக ரூபா 20 லட்சம் தொடக்கம் 25 லட்சம் வரைக்கும் சம்பாதிக்கிறார்கள். இவ்வாறு இவர்கள் சம்பாதிக்கும் பணத்திற்கு இவர்கள் வருமான வரி கட்டுகிறார்களா என்ற விடயம் ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம். அரசு இந்த வைத்திய நிபுணர்கள் விடயத்தில் தலையிட்டு இவர்கள் தனியார் வைத்தியசாலைகளுக்குச் சென்று வைத்தியம் செய்வதற்கு கட்டுப்பாடு விதிக்க வேண்டும். அப்பொழுது தான் போதனா வைத்தியசாலைகக்கும் மற்றும் அரச வைத்தியசாலைகளுக்குக்கும் நோயாளர் நம்பிக்கையுடன் சென்று வைத்தியம் செய்ய முடியும். இந்தப் பண வெறி பிடித்த வைத்தியர்களையும் கட்டுப்படுத்த முடியும்.




# ராஜீவ் கொலையாளிகள் 25 வருடங்கள் வேலூர் சிறையில்


▲ முருகன்


▲ சாந்தன்


▲ பேரறிவாளன்


▲ நளினி


▲ ரவிச்சந்திரன்


ராபர்ட் பயஸ்


▲ ஜெயகுமார்

(சென்னை)

1991 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி ஸ்ரீபெரம்பத்தூரில் வைத்து ராஜீவ்கந்தி தற்கொலைப் போராளியால் கொலை செய்யப்பட்டார்.

அதனையடுத்து சந்தேகத்தின் பேரில் கொலையாளிகளைக் கைது செய்தாகள்.

1 ஆம் குற்றவாளியான நளினி (இந்தியா) 14 யூன் 1991 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். 2 ஆம் குற்றவாளியான சாந்தராஜன் (சாந்தன்-இலங்கை) 22 யூலை 1991 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். 3 ஆம் குற்றவாளியான ஸ்ரீகரன் (முருகன்-இலங்கை) 14 யூன் 1991ம் ஆண்டு கைது செய்யப்பட்டார். 18 ஆம் குற்றவாளியான பேரறிவாளன் (அறிவு-இந்தியா) 19 யூன் 1991ம் ஆண்டு கைது செய்யப்பட்டார். மேலும் ரவிச்சந்திரன் (ரவிப்பிரகாஸ்-இந்தியா) 6 ஜனவரி 1991ம் ஆண்டு கைது செய்யப்பட்டார்.

ஜெயக்குமார் (ஜெயன்) 18 யூன் 1991 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். றொபேட் (பயஸ்-குமாரலிங்கம்) 18 யூன் 1991 ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டார். இந்த 7 குற்றவாளிகளுடன் சேர்த்து 26 பேருக்கு மரண தண்டனை தடா நீதிமன்றத்தால் விதிக்கப்பட்டது


அதனையடுத்து 1999 ஆம் ஆண்டு மே 11 ஆம் திகதி உச்ச நீதி மன்றம் சாந்தன், நளினி, முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கு மரணதண்டனையை ஊர்ஜிதப்படுததப்பட்டது. ஜெயக்குமார், பயஸ், றொபேட் ஆகிய மூவருக்கும் தடா நீதி மன்றம் விதித்த மரண தண்டனையை ரத்துச் செய்து ஆயுள் தண்டனையாக உச்ச நீதிமன்றம் மாற்றியது.

மேலும் 2004 ஏப்ரல் 25ம் திகதி அன்றைய தமிழக ஆளுனர் பாத்திமா பீ.பீ யால் நளினியின் தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது.

அதனையடுத்து சாந்தன், முருகன், பேரறிவாளன் ஆகியோருக்கும் ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டது. இவ்வாறு ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டு யூன் நடுப்பகுதியோடு இந்த 7 குற்றவாளிகளும் 25 வருடங்கள் சிறையில் வாடி வருகின்றார்கள்.

உலகிலேயே இந்த 7 குற்றவாளிகளும் தான் ஆயுள் கடந்த 25 வருடங்கள் ஆயுள் சிறைத் தண்டனையை அனுபவித்து வருகின்றனர். இவர்களுக்கு என நடக்கும் என்று யாருக்குமே தெரியவில்லை.

## ஹற்றன் சென்.ஜோன் பொஸ்கோ கல்லூரியின் கட்டிடம் திறந்துவைப்பு



(க.கிஷாந்தன்)

ஹற்றன் சென்.ஜோன் பொஸ்கோ கல்லூரியின் கட்டிடத்தின் மூன்றாம் மாடி நிர்மாணப்பணிகள் நிறைவுபெற்று வைபவ ரீதியாக 03.06.2016 அன்று மத்திய மாகாண விவசாய சிறிய நீர்பாசன, கால்நடை உற்பத்தி, கமநல அபிவிருத்தி மீன்பிடி விவகாரம், இந்து கலாசாரம் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் எம்.ரமேஷ்வரன் த லைமையில் திறந்து வைக்கப்பட்டது.

மத்திய மாகாண நிதி ஒதுக்கீட்டின் ஊடாக ரூபா 4.5 மில்லியன் செலவில் இக் கட்டிடம்நிர்மாணி க்கப்பட்டது. இந்நிகழ்வில் மத்திய மாகாண சபை உறுப்பினர்களான எஸ். சக்திவேல், கல்விப் பணிப்பாளர் மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை பழைய மாணவர்கள் என பல முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி :** யாழ்ப்பாணம் முன்பு கூழ் இப் போது வாள் இனி எதற்கு பே(f)மஸ் ஆகும்?

**ஆர். மைதிலி, வவுனியா.**

பதில் : **மீண்டும் கள்ளுக்கு பேமஸ் ஆகும்.**

**கேள்வி :** கருணாவின் நிலை என்னாச்சு?

**தி. நிஷாந்தன், கிளிநொச்சி.**

பதில் : **இப்போது அவர் செல்லாக்காசு.**

**கேள்வி :** அரபுதேசத்திலும் பார்க்க இங்கே அதிக வெப்பத்திற்கு காரணம் என்ன?

**த. ரவி, சாவகச்சேரி.**

பதில் : **பூ மத்திய ரேகைக்கு அருகில் அருப்பதால்.**

**கேள்வி :** தமிழ் அரசியல் தலைவர்களில் சிறந்தவர் யார்?

**எஸ். சந்தோஷ், யாழ்ப்பாணம்.**

பதில் : சத்தியமா நான் இல்லை.

**கேள்வி :** இறைவனுக்கு உயரமான சிலைகள் எழுப்பப்படுவதற்கு காரணம்?

**கா. மதுஷா, புங்குடுதீவு.**

பதில் : **விரைவில் மேலே போவதற்கு.**

**கேள்வி :** ரணிலின் காலப்பகுதியில் கொழும்பு நகரம் நீரில் முழ்கினால் தலை நகரம் எதுவாக இருக்கும்?

**பா. சிந்துஜா, மானிப்பாய்.**

பதில்: **நிச்சயமா யாழ்ப்பாணம் இல்லை.**

**கேள்வி :** நம் தேசத்தில் தொடரும் முன்னேற்றங்கள் பற்றி

**செ. தயாளன், பருத்தித்துறை.**

பதில் : **கொலை, கொள்ளை, கற்பளிப்பு உன்னத நிலையில் உள்ளது.**

**கேள்வி :** நயன்தாராவின் நம்ம ஆளு பார்த்திட்டிங்களா?

**ரி. கிரிஷாந், உடுப்பிட்டி.**

பதில் : **நம்ம ஆளை பார்க்கவில்லை. நயன்தாராவை பார்த்துவிட்டேன்.**

**கேள்வி :** பெண்களுக்கு சுரிதார் நல்லதா அரைப்பாவாடை நல்லதா?

**வி. ரமணன், நல்லூர்.**

பதில் : hot pants **தான் நல்லது.**

**கேள்வி :** வடக்கில் காணிகளை விடுவிக்க இராணுவம் தயாராக இருக்கின்றது. ஆனால் சில அரசியல்வாதிகள் தடை போடுவதன் காரணம் என்ன?

**எஸ். ஜோன்சன், மன்னார்.**

பதில்: **சுலபமாக காணிகளை விடுவித்தால் அரசியல்வாதிகளுக்கு என்ன இலாபம். நீங்களும் நானும் வாக்களிக்க மாட்டோம் அல்லவா?**

**கேள்வி :** விக்கியும் மங்களவும் தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவைச் சந்திக்க முயற்சிக்கின்றார்கள். இதில் யார் வெற்றி பெறுவார்கள்?

**எம். மணிமேகலை, புதுக்குடியிருப்பு**

பதில்: **இருவரும் செய்வது தேவையற்ற முயற்சி. விக்கியார் இதுவரை தமிழ் மக்களுக்கு எதுவும் செய்யவில்லை. அம்மாவைச் சந்தித்து என்னத்தை சாதிக்கப் போகின்றார்.**

**கேள்வி :** ஜப்பான் வாகனங்களின் விலை அதிகரித்ததால் யாருக்கு இலாபம்?

**சி. வடிவேலு, நம்பைக்குளம்.**

பதில்: **இறக்குமதியாளர்களுக்குத்தான் இலாபம்.**

**கேள்வி :** இங்கிலாந்துடனான டெஸ்ட் போட்டித்தொடர் இலங்கை தோல்வியடை என்ன காரணம்?

**க. அல்லிராணி, பளை.**

பதில்: **இலங்கை விளையாட்டு வீரர்களின் திமிர்தான் காரணம்.**

**அரசியல், சினிமா, விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.**

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**அரசகேசரி பதில்கள்**

**தினச்செய்தி**

*தில்லைகட்டிவீதி, சுன்னாகம்.*

## இலங்கைத் தமிழ் மாணவனுக்கு கனடாவில் அதி உயர் விருது



இலங்கைத் தமிழ் மாணவர்க்கு கனேடிய அதி உயர் கெடட் (Cadet) விருது வழங்கப்பட்டுள்ளது.

அமோஸ் டன்ஸ்டன் என்ற இலங்கைத் தமிழ் மாணவரே இவ்வாறு கனேடிய அதி உயர் விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கனடாவின் முன்னாள் பிரதமர் ஸ்டீவன் ஹார்பரினால் அண்மையில் இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

கனேடிய கெடட் விருதுகளில் அதி உயர் விருதாகக் கருதப்படும் Lord Strathcona Award விருது அமோஸிற்கு வழங்கப்பட்டுள்ளது.

உடல் பயிற்சி மற்றும் இராணுவப் பயிற்சிகளில் அதி உச்ச திறமைகளை வெளிப்படுத்தும் கெடட் வீரர்களை ஊக்குவித்து கௌரவிக்கும் நோக்கில் இந்த விருது வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட அமோஸ் தற்போது கனேடிய பிரஜை என்பது குறிப்பிடத்தக்கது.

மணி டன்ஸ்டன் மேரி டண்ஸ்டன் ஆகியோரின் சிரேஸ்ட புதல்வாரன அமோஸ் American Football விளையாட்டிலும் மிகச் சிறந்த திறமைகளை வெளிப்படுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## 2 கோடிக்கு ஏலம்போன கைப்பை



ஹொங்கொங்கில் உள்ள கிறிஸ்டி மையத்தில் ஒரு கைப்பை ஒன்று சமீ பத்தில் ஏலம் விடப்பட்டது. அது இமாலயன் நிலோடிகஸ் இன முதலை தோலினால் தயாரிக்கப்பட்டது. வைரக்கற்கள் பதிக்கப்பட்டுள்ள அந்த கைப்பையை தொலைபேசியில் பலர் ஏலம் கேட்டனர். இறுதியில் அந்த கைப்பை 2 கோடிக்கு ஏலம் போனது. அதை விலைக்கு வாங்கியவர் யார் என்ற விவரம் வெளியிடப்படவில்லை.

இந்த கைப்பை ரூ.1 கோடியே 32 லட்சம் வரை ஏலம் போகும் என எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் அது ரூ.2 கோடிக்கு ஏலம் எடுக்கப்பட்டுள்ளது. கையினால் தயாரிக்கப்பட்டுள்ள இந்த கைப்பையின் பூட்டு, கொக்கி போன்றவை 18 கரட் தங்கத்தினால் தயாரிக்கப்பட்டவை.

இதற்கு முன்பு ஹாங் கொங்கில் ஒரு கைப்பை ரூ.1 கோடியே 47 லட்சத்துக்கு ஏலம் போனது. அந்த சாதனையை இந்த கைப்பை முறியடித்தது.

## உலகின் மிக நீளமான சுரங்க ரயில் பாதை



உலகின் மிக நீளமான சுரங்க ரயில் பாதையின் திறப்பு விழா சுவிற்சர்லாந்தில் கடந்த புதன்கிழமை கோலாகலமாக நடைபெற்றது.

இந்த சுரங்கப்பாதைக்கான தோராயமான வடிவமைப்பை முதன் முதலில் 1947 ஆம் ஆண்டும் சுவிற்சர்லாந்து நாட்டை சேர்ந்த கர்ல் எட்வேர்டு கார்னர் என்பவர் வெளியிட்டார்.

காட்தர்டு பேஸ் சுரங்கம் என்ற பெயரிடப்பட்ட இந்த சுரங்க வழி ரயில் பாதையின் நீளம் 57 கிலோ மீற்றர் ஆகும்.

இதற்கு முன்னதாக, ஜப்பான் நாட்டில் உள்ள செய்கன் என்ற சுரங்க வழி ரயில் பாதை (53 கி.மீ) தான் உலகின் மிக நீளமான சுரங்க வழி ரெயில் பாதையாக இருந்தது.

அல்ப்ஸ் மலைத் தொடரில் இந்த சுரங்கப்பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. இதனால், சூரிச் மற்றும் மிலன் நகரங்களுக்கு இடையிலான பயண நேரம் 40 நிமிடங்கள் வரை குறையும்.

2, 400 பணியாளர்களை கொண்டு சுமார் 12 பில்லியன் பிராங்க் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த ரயில் பாதை சுவிஸின் உறி மாகாணத்தில் உள்ள எர்ஸ்ட்பெல்டு என்ற பகுதியில் தொடங்கி, டிசினோ மாகாணத்தில் உள்ள போடியோ என்ற பகுதியில் நிறைவடைகிறது.

இந்த வரலாற்று சிறப்புமிக்க திறப்பு விழா நிகழ்ச்சியில் ஜேர்மன் சான்சலரான ஏஞ்சலா மெர்க்கல், பிரான்ஸ் ஜனாதிபதியான பிராங்கோயிஸ் ஹாலண்டே, இத்தாலி பிரதமரான மேட்டோ ரென்ஸி ஆகிய தலைவர்களுடன் சுவிஸ் நாட்டு முக்கிய அரசியல்வாதிகளும் பங்கேற்றனர்.

# சமூக விழிப்புணர்வுக் களம்




# காதல் – கல்யாணம் ஓர் அலசல்

திருமணம் என்பது காதலித்துச் செய்வதா? இன்றேல் பெற்றோர்கள் பார்த்து ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் செய்து வைப்பதா? இது தான் இன்றைய இணையத் தளங்களிலும், பத்திரிகைகளிலும், முகநூலிலும் மிகவும் சூடாக விவாதிக்கப்படும் விடயம் ஆகும். இன்றைய இளைஞர்கள் சமூக வலைத் தளங்களோடு ஒன்றியுள்ளார்கள். இன்று முக நூல் அவர்களது வாழ்கையோடு ஒன்றித்துவிட்டது. முகப்புத்தகம் ஊடாகவே சம்பாஷனை செய்து அதன் மூலம் தமது விருப்பங்களைத் தெரிவித்து வருகிறார்கள். தகவல் பரிமாற்றம் மூலம் குசலம் விசாரிக்கிறார்கள், தகவல் பரிமாற்றம் மூலம் சுக நலன்கள் விசாரிக்கிறார்கள், தொலைபேசி இலக்கங்களை பரிமாறிக் கொள்கிறார்கள்.



அவருடன் வாழ்ந்தால் வாழ்க்கை நன்றாக இருக்கும் என்பது காதல் அல்ல, அவருடன் தான் வாழ்க்கை என்பதுதான் காதல்.



காதல் என்பது அழகான கனவு.

பின்னர், தொலைபேசிச் சம்பாஷணை மூலம் ஓரிடத்தில் சந்திக்கிறார்கள். இவ்வாறான தொடர் சந்திப்பின் மூலம் காதலிக்க ஆரம்பிக்கிறார்கள். இச் சந் திப்பின் மூலம் தொடரும் காதல் பெரும் பாலும் நிலைப்பதில்லை.முகநூல் மூலம் அறிமுகமாகி காதல் வசப்படும் ஆணும், பெண்ணும் தீவிர வேட்கை கொண்டவராக மாறுகிறார்கள். உடலுறவில் ஈடுபடுகிறார்கள். குறிப்பிட்ட காலத்தற்குப் பின் பிரிந்து போகிறார்கள். சில பெண்கள் ஏமாற்றப்படுகிறார்கள். கர்ப்பமடைகிறார்கள். காதும் காதும் வைத்தாற் போல் கருக் கலைப்புச் செய்கிறார்கள். எல்லோரும் அப்படி அல்ல, ஒரு சிலரே இவ்வாறு தவறான வழியில் சென்றவர்கள். பின் உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள்.

இதுவே காதலின் முடிவாக இன்று இருக்கின்றது.காதல் என்பது ஒரு அதிசயமான உணர்ச்சி. ஆணும், பெண்ணும் வயது வந்த பின் அந்த உணர்ச்சிக்கு அடிமைப் படுகிறார்கள். அவ்வாறு அடிமைப்படும் பொழுது பல்வேறு விளைவுகளுக்கு ஆளா கிறார்கள். அண்மையில் "தினச்செய்தி" காதல், கல்யாணம் பற்றிய ஒரு விரிவான ஆய்வில் ஈடுபட்டது. பல இளைஞர், யுவதிகளைச் சந்தித்து பேட்டியெடுத்தபோது அனைவருமே காதல் கல்யாணம் தான் சிறந்தது என்று கூறினர். எஸ். தேவிகா - வயது 35, 2 ம் வட்டாரம், கோம்பாவில், புதுக்குடியிருப்பு.சி. பன்னீர்ச்செல்வம் - வயது 41, வட்டுவாகல். காதலிப்பதும் கல்யாணம் பண்ணுவதும் அவரவர் மனதைப் பொறுத்தது. பாலசிங்கம் ஸ்ரீஸ்வரன் - வயது 35, முள்ளிவாய்க் கால் மேற்கு, முல்லைத்தீவு.கே. பெர்ணாண்டோ - வயது 48, செல்வபுரம், முல்லைத்தீவு.ஆர். ஸ்ரீவதனி - வயது 30, பிரதான வீதி, முல்லைத்தீவு.சந்திரன் மதிவதனி - வயது 21, பிரதான வீதி, முல்லைத்தீவு.நவநீதகுமார் பரிமளா - வயது 35, உயரிப்புலம், இளவாலை. ஆகியோர் காதல் கல்யாணம் தான் சிறந்தது என்று எமக்குத் தெரிவித்தனர்.

ஒருவருக்கொருவர் கருத்தொற்றுமை இல்லாவிட்டால் அது காதல் இல்லை.



காதல் என்பது போரைப் போன்றது. துவக்குவது எளிது. முடிப்பது கடினம்.

சில சமயம் கண்களால் பார்க்க முடியாத விஷயங்களை இதயம் பார்க்கும். அதுதான் காதல்.







இதயத்திற்கு ரத்தமாகவும், உடலுக்கு தண்ணிராகவும் இருப்பது காதல்.



காதலிப்பதும், காதலிக்கப்படுவதும் விவரிக்க முடியாத அளவிற்கு மகிழ்ச்சியை அளிக்கும்.




காதலிப்பதை விட ஏதாவது சிறந்த பொருள் ஒன்று இருந்தால் அது காதலிக்கப்படுவதாக இருக்கும்.



காதலுக்காக உயிரிழப்பவர்களும் உண்டு. காதலை இழந்ததால் உயிரிழப்பவர்களும் உண்டு.

"அரசியல் என்பது அராஜகத்திற்கும் கொடுங்கோன்மைக்கும் இடையில் ஊசலாடும் ஒரு மாயத் தோற்றத்தின் பிரதிபலிப்பேயாகும்." அல்பேட் ஐயன் ஸ்ரீன்

## சொன்னார்கள் சொன்னார்கள்




தமிழக முதலமைச்சரை சந்திப்பதற்கான தி- கதி அறிவிக்கப்படும் முன்னர் எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளதால், எதிர்ப்புக்களை சமாளித்து அவரை சந்திக்கவுள்ளதாக புன்முறுவலுடன், வடமாகாண முதலமைச்சர் சீ.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்



இந்த நாட்டில் சட்டத்தின் பிரகாரம் பல விடயங்களிற்கும் தெளிவான தண்டனை எழுதப்பட்டுள்ளது. குறிப்பாக பெண்ணின் கையை பிடித்துஇழுத்தால் 05 வருடம் , கடத்தினால் 07 வருடம் , கற்பழித்தால் 20 வருடம் சிறைத்தண்டனை அதேபோல் கெ- ாலை செய்தால்மரணதன்டனை எனசட்டத்தில் எழுத்தில்உள்ளது –என மாவட்ட மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் தெரிவித்தார்.



இங்கிலாந்து அணியுடனான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில்இலங்கை அணியின் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களில்ஒருவரான டில்சான் காயம் காரண- மாக விளையாடபோவதில்லை என தெரிவித்துள்ளார்.



"ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறை தண்டனை அனுபவித்து வரும் பேரறிவாளன் கைது செய்யப் பட்டு வரும் 11-ம் திகதியுடன் 25 ஆண்டுகள் நிறைவடைகின்றன. அவருடன் சிறை த் தண்டனை அனுபவித்து வரும் முருகன், சாந்தன், நளினி உள்ளிட்ட 6 பேரும் 25 ஆண்டுகளாக சிறையில் வாடி வருகின்றனர்"என்று பாமக நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.



இராஜாங்க அமைச்சர்களது பதவிகள் – அதிகாரங்கள் உடனடியாக வர்த்தமானியில் வெளியிடப்பட்டுபிரகடனம் செய்யப்பட வேண்டும் என்று சகல இராஜாங்க அமைச்சர்களும் ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன விடம் அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தோம். இந்தக்கோரிக்கைக்கு அமைய, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கஆகியோர் இராஜாங்க அமைச்சர்களது அதிகாரங்கள் தொடர்பில் ஒருவார காலத்துக்குள்வர்த்தமானியில் அறிவிக்கப்படும் என்று வாக்குறுதி வழங்கியுள்ளனர். இது தவிரவேறு எந்தவிதத்தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை' –என்று இராஜாங்க அமைச்சர்எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் குறிப்பிட்டுள்ளார்.



நல்லாட்சி என்ற பெயரில் மக்களின் பணத்தை கொள்ளையடிக்கும் ரணில்–மைத்திரி ஆட்சி நல்லாட்சி அல்ல. இதுவரைகாலம் இருந்த ஆட்சிகளை விடவும் மிகவும் மோசமான நிலைமைக்கு இன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன கூட்டணி செல்கின்றது என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.






தான் இறந்து விட்டதாக வதந்தி பரப்புவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என, நடிகர் செந்தில் மதுரை பொலி ஸ்கமிஷனர் அலுவலகத்தில் புகார் கொடுத்திருக்கிறார். இதுகுறித்து அவர் "இதுபோல நான் இறந்து விட்டதாக வதந்திபரப்புவோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். தி.மு.க வினர் தான் இதுபோல செய்கின்றனர். நல்ல குடும்பத்தில் பிறந்தயாரும் இதுபோல செய்ய மாட்டார்கள். அதனால் நான் மீண்டும், மீண்டும் சொல்கிறேன் இவ்வாறு செய்யாதீர்கள்.முதல்முறை பொறுத்துப் பார்த்தோம். ஆனால் மீண்டும், அவர்கள் இவ்வாறு செய்வதால் புகார் கொடுக்க வேண்டியதாயிற்று"என்று கூறியிருக்கிறார்.

அலரிமாளிகையில் சிகரெட் கம்பனிகாரர்கள் முன்னிலையில் என்னை நிற்கவைத்து கடந்த ஆட்சியில் கேள்விகேட்கப்பட்டது. ஆனால் சிகரட்டுக்கு எதிரான எனது போராட்டத்தை கைவிடவில்லை. இன்று அதில் வெற்றியும்கண்டுள்ளேன் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

# கொரிலாவிடம் சிக்கிய சிறுவனின் திகில் நிமிடங்கள்



அமெரிக்காவின் ஓஹியோ மாகாண த்தின் சின்சினாட்டில் விலங்கியல் பூங்கா ஒன்று உள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அப் பூங்காவில் கொரிலா இருந்த தண்ணீர் தொட்டி ஒன்றுக்குள் 3 வயது சிறுவன் ஒருவன் தவறி விழுந்துள்ளான்.

இதன்போது, அங்கிருந்த 17 வயதுடைய 'ஹரம்பே' எனப்பெயரிடப்பட்ட ஆப்பரிக்க கொரில்லா ஒன்று சிறுவனை தூக்கிச் சென்றதோடு சுமார் 10 நிமிடங்கள் அங்கும் இங்குமான இழுத்துச் சென்றது.

இதனை கண்ட பாதுகாவலர்கள் குழந்தையை காப்பாற்றும் நோக்கில் கொரில்லாவை துப்பாக்கியால் சுட்டுக் கொன்று குழந்தையை பாதுகாப்பாக மீட்டனர்.கொரில்லா இறப்பதற்கு ஒரு நாள் முன்னரே தனது 17ஆவது பிறந்த நாளை கொண்டாடியுள்ளகொரில்லாவை மயக்க ஊசி போட்டு குழந்தையை காப்பாற்றுவதற்கு பதிலாக சுட்டு கொலை செய்துள்ளது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது.இந்நிலையில் கொரிலாவிடம் சிக்கிய சிறுவன் இறந்திருக்கலாம் என பலராலும் நம்பப்பட்ட போதும் சிறுவன் தொடர்பில் எவ்வித தகவல்களும் புகைப்படங்களும் வெளிவராமல் இருந்தது.இந்நிலையில் முதன் முதலாக சிறுவனின் புகைப்படம் சிறுவனின் விபரங்கள் பெற்றோரின் புகைப்படங்கள் வெளியாகியுள்ளன.

3வயதுடைய இசாஹா டிக்சர்சன் என்ற சிறுவனே இவ்வாறு கொரிலாவிடம் சிக்குண்டவன் ஆவான்.

சிறுவனின் தாயாரான 32 வயதுடைய மிச்சல் கிரிக்,இந்நிலையில், ஓஹியோ பொலிசார் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். அதில், 'பெற்றோரின் கவனயீனம் காரணமாகவே குழந்தை தவறி கொரில்லா அருகில் விழுந்துள்ளது. குழந்தை கொரில்லா கையில் கிடைத்தவுடன் வேறுவழியின்றி அதனை சுட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.எனவே, பெற்றோரின் அலட்சத்தியத்தால் ஏற்பட்ட இந்த சம்பவம் தொடர்பாக அவர்கள் மீது வழக்கு தொடுக்க முடிவு செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்துக்கு சிறுவனின் பெற்றோரே பொறுப்பு கூற வேண்டும் என்று அந்த மனு கூறியுள்ளது.

## அங்கும் இங்கும்

# இந்திரா காந்தியின் கொலையும் வட பகுதி தமிழ் மக்களும்




இலங்கையின் இனப்பிரச்சினையில் இந்தியாவின் அதிதீவிர ஈடுபாடு இலங்கைப் பிரச்சினையை ஒரு சர்வதேச பிரச்சினையாக உருவாக்கிற்று. இலங்கை அரசாங்கம் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியுடன் ஒரு சுமுகமான சமரசத்திற்கு வராமல் வழங்கிய வாக்குறிதிகளையெல்லாம் நிறைவேற்றாமல் கை விட்டுக் கொண்டே வந்தது.

1984 அக்டோபர் மாதம் புளொட் போராளிகள் கிளிநொச்சியில் உள்ள நீதி மன்றத்திற்குள் நுழைந்து 72 துப்பாகிகளுடன் தப்பிச் சென்றார்கள். மறு தினம் ஈரோஸ் இயக்கம் கொழும்பில் பல இடங்களில் குண்டு வைத்தது. இக் குண்டு வெடிப்பில் மூன்று பேர் இறந்தார்கள். ஈரோஸ் போராளிகள் நாட்டின் தலை நகரத்திலேயே குண்டு வைத்ததன் மூலம் அவர்களது போராட்டத்தை அவர்கள் விரும்பிய இடமெல்லாம் கொண்டு செல்ல அவர்களால் முடியும் என நிரூபித்தார்கள்.

இச் சந்தர்ப்பத்தில் இந்தியா தனது படையை தமிழருக்காக அனுப்பி வைக்கும் என்று நம்பிய அமெரிக்கா இலங்கையின் இனப்பிரச்சினையில் வெளியார் தலையிடுவதற்கு எச்சரிக்கை விடுத்தது. அக்டோபர் 27ம் திகதி இலங்கையினுடைய இனப் பிரச்சினையை இலங்கை அரசே தீர்த்து வைக்க முன்வர வேண்டும் என்று அமெரிக்க ராஜாங்க அமைச்சர் றிச்சாட் மேர்ஃபி கோரிக்கை விடுத்தார். அந்த சந்தர்ப்பத்தில் இலங்கைக்கு எதிராக போர் தொடுக்கும் எண்ணம் தனக்கு இல்லை என்று இந்திரா காந்தி பகிரங்கமாகவே அறிவித்தார். அவ்வாறான அறிவிப்பை அவர் மீறமாட்டார் என உறுதியாக நம்ப முடியாமல் இருந்தது.

ஆக்டோபர் 31ம் திகதி மூன்று இலங்கையர்கள் இந்திரா காந்தி யின் விஷேட தூதுவரான ஜி. பார்த்தசாரதியின் புது டெல்லியிலுள்ள இல்லத்திற்குச் சென்று இலங்கை இனப் பிரச்சினைக்கு ஒரு தீர்க்கமான முடிவெடுக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தனர்.

அவ்வாறு அவர்கள் பேச்சு வார்த்தை நடத்தும் போது இந்திரா காந்தி அவரது மெய்ப்பாதுகாவலரால் சுட்டுக் கொல்லப்பட்டார். 31ம் திகதி அக்டோபர் 1984ம் ஆண்டு காலையில் இந்திரா காந்தி தனது தோட்டத்தினூடாகச் செல்லும் போது அவரை அவரது மெய்ப்பாதுகாவர்கள் சுட்டார்கள் அதனையடுத்து இந்திராகாந்தி அகில இந்திய மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். அங்கு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சத்திர சிகிச்சை செய்து அவர் உடலில் உள்ள குண்டுகளை வெளியே எடுக்க முயற்சிகள் எடுக்கப்பட்டது. துப்பாக்கிச் சூட்டுக்குப் பின் 1 1-2 மணித்தியாலத்தில் அவரது உயிர்



பிரிந்தது.

ஆரம்பத்தில் இந்திரா காந்தி ஏன் கொலை செய்யப்பட்டார் என்று யாருக்கும் புரியவில்லை. அவரைச் சுட்ட இரண்டு சீக்கியரும் சீக்கிய தீவிரவாதிகள் எனத் தெரிய வந்தது. அவர்கள் யூன் மாதம் அமிர்தசரஸில் உள்ள பொற் கோயிலுக்கு இந்திராகாந்தி துருப்புகளை அனுப்பியதற்கு பழி தீர்க்கும் முகமாகவே இத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது என்று தெரிய வந்தது.

ஆரம்ப தகவலின் படி இந்திரா காந்தியைச் சுட்ட இரண்டு பாதுகாவலரும் அவரது வீட்டில் பணிபுரிந்த மெய்ப்பாதுகாவலர் என்று தெரிய வந்தது. யூன் மாதம் அமிர்தசரஸ் பொற் கோயிலுக்கு இந்திரா காந்தி இராணுவத்தினரை அனுப்பியதில் ஆயிரம் சீக்கியர்கள் கொல்லப்பட்டார்கள். எனத் தெரிய வந்தது. இந்த சம்பவத்தையடுத்து இந்திராகாந்திக்கு கொலை மிரட்டல்கள் வந்து கொண்டே இருந்தது.

அவர் இறப்பதற்கு முதல் நாள் அரசியல் கூட்டத்தில் பேசும் போது "நாட்டிற்கு சேவை செய்யும் வேளையில் நான் இறப்பதைப் பற்றிக் கவலைப்படவில்லை இன்று நான் இறந்தால் என்னிலிருந்து புறப்படும் ஒவ்வொரு துளி இரத்தமும் நாட்டை உயிர்ப்பிக்கும்," எனக் கூறினார்.

இந்திரா காந்தி 31 அக்டோபர் 1984ம் ஆண்டு புது டெல்லியிலுள்ள சஃப்னர் யும் வீதியில் அமைந்துள்ள அவரது இல்லத்தில் வைத்துக் கொல்லப்பட்டார். அவரது மெய்ப் பாதுகாவலர்களான சற்வன் சிங், பியன்ட் சிங் ஆகியோரே அவரை சுட்டுக் கொன்றார்கள். அன்று காலை 9.20 மணியளவில் தனது வீட்டிலிருந்து முதலாவது இலக்க அக்பர் றோட்டிலுள்ள அவரது காரியாலயத்திற்குச் நடந்து சென்றார். அங்கே இந்திரா காந்தி பற்றிய ஒரு விபரணச் சித்திரம் சம்பந்தமாக பேட்டி காண்பதற்கு பிரிட்டிஸ் நாட்டின் நடிகர் பீற்றர் உஸ்ரிநோஃப் காத்துக் கொண்டிருந்தார்.

இந்திரா காந்தி தனது இல்லவாசலையடைந்த சமயம் சற்வன் சிங், பியன்ட் சிங் ஆகியோர் பாதுகாப்புக் கடமையில் இருந்தார்கள். இந்திரா காந்தி வாசலையடைந்த பொழுது இருவரும் இந்திரா காந்தியை நோக்கிச் சுட ஆரம்பித்தார்கள். உதவிப் பொலிஸ் அதிகாரி (Sub Inspector ) பியன்ட் சிங் அவரது வயிற்றை நோக்கி மூன்று தடவைகள் சுட்டான். இந்திரா காந்தி நிலத்தில் விழுந்த பிற்பாடு சற்வன் சிங் தனது Sten Gun ஆல் முப்பது தடவைகள் சுட்டான். அதையடுத்து அந்த இரு கொலையாளிகளும் சுட்டுப் பிடிக்கப்பட்டார்கள். இருவருமே 1989ம் ஆண்டு தூக்கிலிடப்பட்டார்கள். இந்த சீக்கியர்கள் இந்திரா காந்தியை கொலை செய்ததையடுத்து ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் டெல்லியைச் சுற்றி நடைபெற்ற

> "அரசியல் என்பது அராஜகத்திற்கும் கொடுங்கோன்மைக்கும் இடையில் ஊசலாடும் ஒரு மாயத் தோற்றத்தின் பிரதிபலிப்பேயாகும்."
> அல்பேட் ஐயன் ஸ்ரீன்

கலவரத்தில் கொல்லப்பட்டார்கள்.


இந்திரா காந்தியின் கொலையை அடுத்து இலங்கையின் வடக்கு, கிழக்கு முழுவதும் துக்க தினம் கொண்டாடப்பட்டது. கடைகள் மூடப்பட்டன. போராளிகளும், பொதுமக்களும் கறுப்புக் கொடிகளை ஏற்றினார்கள். இறந்த தலைவியைப் பற்றி சுவர்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. யாழ் வைத்தியசாலையில் இருந்த தேசியக் கொடியை போராளிகள் அரைக் கம்பத்தில் இறக்கி வைத்தனர். குண்டுகளையும் வெடித்தனர். இவ்வாறு குண்டு வெடித்ததில் ஒரு இராணுவச் சிப்பாய் இறந்தார்.

அதேநேரத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்த இராணுவ வீரர்கள் இந்திரா காந்தி இறந்த செய்தியைக் கேட்டதும் ஆட்டம் பாட்டத்தில் ஈடுபட்டார்கள். வீதியால் சென்ற தமிழ் மக்களைப் பார்த்து " உங்கள் அம்மா எங்கே? " எனக் கேட்டு கேலி செய்தார்கள். என்னதான் இருந்தாலும் தமிழ் மக்கள் இந்திரா காந்தியின் இறப்பை தமது சொந்த இழப்பாக நினைத்து பெரும் துயரம் அடைந்தார்கள். இந்திரா காந்தியின் இறுத்திக் கிரியை நடந்த பொழுது போராளிகள் ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் ஒரு முறை குண்டுகளை வெடித்துக் கொண்டிருந்தார்கள்.

அதேநேரத்தில் தமிழ், சிங்கள, மற்ற இனத்தவர்களும் " இந்தியா ஹவுஸ்" (கொழும்பிலுள்ள இந்திய தூதுவரின்

**அரசகேசரி**

வாசஸ்தலம்) ஆல் அனுஷ்டிக்கப்பட்ட துக்க தின நிகழ்வில் கலந்து கொண்டனர். இந்திரா காந்தியின் இறுதிச் சடங்கு நடைபெற்ற நாளை இந்திய மூன்று நாள் விடுமுறையாக அறிவித்தது. இலங்கை அரசும் அன்றைய தினத்தை பொது விடுமுறையாக அறிவித்தது.



# உண்மை வெளிவருகிறது

## பகுதி - 15

இதுவரை கொல்லப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது:

1. ஜூலை 27, 1975 - அல்பிரட் துரையப்பா, நாடாளுமன்ற உறுப்பினர், யாழ்ப்பாண மாநகர முதல்வர்
2. மே 25, 1981 - ஏ. தியாகராஜா, வட்டுக்கோட்டை நாடாளுமன்ற உறுப்பினர்.
3. செப்டெம்பர் 3, 1985 - வீ.தர்மலிங்கம், மானிப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர் (ரெலோவால்)
4. செப்டம்பர் 3, 1985 - கே. ஆலாலசுந்தரம், கோப்பாய் நாடாளுமன்ற உறுப்பினர்.
5. நவம்பர் 13, 1987 - அப்துல் மஜீத் - மூதூர் நாடாளுமன்ற உறுப்பினர்.
6. பெப்ரவரி 12, 1988 - எஸ். நடராஜா (பொட்டர்), முன்னாள் செனட்சபை உறுப்பினர்.
7. ஜூலை 13, 1989 - அ. அமிர்தலிங்கம், தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்.
8. ஜூலை 13, 1989 - வீ. யோகேஸ்வரன், யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்.
9. மே 7, 1990 - சாம் தம்பிமுத்து, மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்.
10. ஜூன் 19, 1990 - டபிள்யூ. கே. யோகசங்கரி, யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்.
11. ஜூலை 15, 1990 - எம். கனகரத்தினம், பொத்துவில் நாடாளுமன்ற உறுப்பினர்.
12. மார்ச் 2, 1991 - ரஞ்சன் விஜேரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்.
13. ஏப்ரல் 23, 1993 - லலித் அத்துலத்முதலி, நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்.
14. மே 1, 1993 - ஆர். பிரேமதாஸா, நாடாளுமன்ற உறுப்பினர், இலங்கை ஜனாதிபதி.
15. அக்டோபர் 24, 1994 - காமினி திஸநாயக்கா, நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர், ஜனாதிபதி வேட்பாளர்.
16. அக்டோபர் 24, 1994 - ஜி.எம். பிரேமசந்திரா, நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்.
17. அக்டோபர் 24, 1994 - வீரசிங்க மல்லிமராச்சி, நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்.
18. அக்டோபர் 24, 1994 - ஓஸி அபேய குணசேகரா, நாடாளுமன்ற உறுப்பினர்.
19. டிசெம்பர் 31, 1994 - கரவை கந்தசாமி, வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர்.
20. ஜூலை 5, 1997 - அ. தங்கத்துரை, திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர்.
21. ஜூலை 20, 1997 - எம்.ஆர்.ஏச். மஹரூப், திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர்.
22. ஜூலை 15, 1998 - எஸ். சண்முகநாதன், வவுனியா நாடாளுமன்ற உறுப்பினர்.
23. அக்டோபர் 6, 1998 - கனகசபை ராஜதுரை, யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்.
24. ஜூலை 29, 1999 - கலாநிதி நீலன் திருச்செல்வம், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்.
25. நவம்பர் 2, 1999 - அற்புதராஜா நடராஜா, யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர்.
26. ஜூன் 7, 2000 - சி.வி. குணரத்ன, நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்.
27. செப்டெம்பர் 16, 2000 - எம்.ஏச்.எம். அஷ்ரப், நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்.
28. நவம்பர் 7, 2000 - அஸ்லி நிமலன்




சௌந்தரநாயகம், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு.

29. அக்டோபர் 20, 2004 - கிங்ஸ்லி ராசநாயகம், மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர்.
30. பெப்ரவரி 7, 2005 - சந்திரா நேரு, மட்டக்களப்பு நாடாளுமன்ற உறுப்பினர் (ரி.எம்.வி.பி).
31. ஆகஸ்ட் 13, 2005 - லக்ஸ்மன் கதிர்காமர், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்.
32. டிசெம்பர் 25, 2005 - ஜோசப் பரராஜசிங்கம், தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ரி.எம்.வி.பி. சுட்டுக்கொன்றது.
33. ஆகஸ்ட் 21, 2006 - சின்னத்தம்பி சிவமஹாராஜா, யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.
34. ஜனவரி 1, 2008 - ரி. மகேஸ்வரன், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.
35. ஜனவரி 8, 2008 - டி. எம். தஸநாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்.
36. மார்ச் 8, 2008 - கிட்டினன் சிவநேசன், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்.
37. ஏப்ரல் 6, 2008 - ஜெயராஜ் பெர்னான்டோபிள்ளை, நாடாளுமன்ற உறுப்பினர், அமைச்சர்.

அத்துடன்,

1991 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆம் திகதி தமிழ் நாட்டில் முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார்.

ராஜீவ் காந்தி சென்னைக்கு அண்மையிலுள்ள ஸ்ரீ பெரும்புத்தூரில் உள்ள மேடையில் இருந்து ஐந்து மீட்டர் தூரத்தில் இருந்தபோது அவருக்கு நான்கு பேரினால் பட்டுச்சால்வை அணியப்பட்டது. அவர்களில் ஒருவர் காங்கிரஸ் தொண்டர் லதா கண்ணன், அவருடைய மகள் கோகிலா அவரைப் புகழ்ந்து இந்தியில் கீதம் இசைத்தார்.

25 வயது மதிக்கத்தக்க மூக்குக் கண்ணாடி அணிந்த இளம் பெண் ஒருவர் ராஜீவ் காந்திக்கு வாழ்த்து தெரிவிக்க முன்வந்து கையில் சந்தனக்கட்டை மாலையோடு திடுதிப்பென முன்தோன்றினார். ராஜீவ் காந்தியை நோக்கி இந்தப் பெண் முன்நகர்ந்து வந்ததையும் மரியாதை செலுத்த குனிந்து அவரது பாதத்தை தொட்டுக்கொண்டதையும் சில நேரடிச் சாட்சிகள் கண்டிருக்கிறார்கள்.

அந்தக் கணப்பொழுது, 10.18 இரவு, அதிர்வுறும் உரத்த குண்டுவெடிப்புச் சத்தம் கேட்டது. மிகச் செறிவாக பொலிசாரும் காங்கிரஸ் தொண்டர்களும் ராஜீவ் காந்தியைச் சூழ இருந்தபோதும், இது நிகழ்ந்தது. இந்தக் குண்டுவெடிப்பு சுமார் 3 மீட்டர் உயரமான ஒளிப்பிழம்பை ஏற்படுத்தியது அது ஒரு சில நிமிடங்கள் நீடித்தது. அதைத் தொடர்ந்து கடும் புகை மண்டலம் - கண்கண்ட சாட்சிகளின் அறிக்கையின்படி இவ்வாறு தெரிகிறது. இந்தக் குண்டுவெடிப்பு பலமான தாக்கத்தை ஏற்படுத்தியது. தடுப்பரணுக்குள் சுமார் 1.75 மீட்டர் தூரத்திற்கு ராஜீவ் காந்தி தூக்கி யெறிப்பட்டார்.

எல்லாமாக, ராஜீவ் காந்தியுடன் சேர்த்து, ஒன்பது பொலிசார் உட்பட 18 பேர் கொல்லப்பட்டார்கள். 12 பொலிசார் உட்பட 33 பேர் காயமுற்றார்கள்.

1989 ஆம் ஆண்டு 2 ஆம் திகதி முதல் 1993 ஆம் ஆண்டு மே மாதம் 1 ஆம் திகதி வரை இலங்கையின் 3 ஆவது ஜனாதிபதியாக பதவி வகித்த ரணசிங்க பிரேமதாஸ மே தின ஊர்வலம் ஒன்றின் போது எல்.ரி.ரி.ஈ. தற்கொலைக் குண்டுதாரியினால் கொல்லப்பட்டார்.

**எல்.ரி.ரி.ஈ. இயக்கத்தால் கொல்லப்பட்ட உள்நாட்டுத் தலைவர்கள்**

1. கந்தையா அமிர்தலிங்கம், உப தவிசாளர், வாகரை பிரதேச சபை, 1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 29 ஆம் திகதி.
2. தோமஸ் அன்ரன், மட்டக்களப்பு பிரதி மாநகர முதல்வர், 1995 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் திகதி.
3. எம். பாலசிங்கம், பிரதேச சபை உறுப்பினர், 1999 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி.
4. முருகேசு குணரத்தினம் (மறு பெயர் வீனோ), புளொட்டின் முன்னாள் பிரதி தவிசாளர், களுவாஞ்சிக்குடி பிரதேச சபை, பொதுசனத் தொடர்பு உத்தியோகத்தர், 1999 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2 ஆம் திகதி.
5. வீரகத்தி குணரத்தினம், புளொட் உறுப்பினர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, 1999 ஆம் ஆண்டு மே மாதம் 5 ஆம் திகதி.
6. HP. ஜெயராஜா, தவிசாளர், செங்கலடி பிரதேச சபை, 1994 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி.
7. பி. கந்தசாமி, பிரதேச சபை உறுப்பினர், 1999 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி, ஆவரங்காலில்
8. செழியன் பேரின்பநாயகம், முன்னாள் மட்டக்களப்பு மாநகர முதல்வர், 2000 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10 ஆம் திகதி.
9. எம். பாலசிங்கம், பிரதேச சபை உறுப்பினர், 1999 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆம் திகதி.
10. நாகர்மணி ராஜதுரை, தவிசாளர், மண்டூர் பிரதேச சபை, 1996 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16 ஆம் திகதி.

(தொடரும் .....)

# நம்நாட்டு திருத்தலப் பாடல்





## உசன் கந்தசுவாமி கோவில்

பாடல் - குறைதீர விரைவோமே குமராலயம்
ஆலயம் - உசன் கந்தசாமி கோவில்
வரிகள் - கு .வீரா
இசை - இசைப்பிரியன்

பல்லவி

குறைதீர விரைவோமே குமராலயம் – உசன்
பதிவாழும் முருகன் தான் அருளோவியம்
கலைஞான தமிழோடு கனிவானவன் – வேலன்
நிலையான தெய்வீக கனியானவன்

சரணம் 1

உனை நினைந்து உயிர் கசிந்து எமை மறந்து அழுகின்றோம்
அடியவர் மனதில் வாழும் சக்திவேலவா
உமையவளின் திருமகனே உனை தினமும் தொழுகின்றோம்
உன்னருள் ஒன்று போதும் வெற்றிவேலவா
உன் பன்னிரண்டு விழிகளினால் பார்த்திடைய்யா
உன் பக்தர்களின் வேதனையை தீர்த்திடைய்யா
வேலவா ஓடிவா வேலவா எங்கள் ஊரின் காவலா

சரணம் 2

அருணகிரி திருப்புகழில் மனமுருகி மகிழ்பவனே
அவ்வையின் தமிழினிலும் வாழும் வேலவா
அழகினிற்கே அழகுதரும் பேரழகாய் திகழ்பவனே
கொவ்வையின் இதழ் சிரிப்பில் ஆளும் வேலவா
உன் பாதங்களை கண்ணீரால் நனைக்கின்றோம்
உன் வேலின் முனை வெற்றிகளை நினைக்கின்றோம்
வேலவா ஓடிவா வேலவா எங்கள் ஊரின் காவலா .

# சுடோகு புதிர் - 3

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | | | | |
| | | 3 | 6 | | | | | |
| | 7 | | | 9 | | 2 | | |
| | 5 | | | | 7 | | | |
| | | | | 4 | 5 | 7 | | |
| | | | 1 | | | | 3 | |
| | | 1 | | | | | 6 | 8 |
| | | 8 | 5 | | | | 1 | |
| | 9 | | | | | 4 | | |

**விளையாடும் முறை**

1. ஒவ்வொரு அறையிலும் 1 முதல் 9 வரை உள்ள எண்களை ஒரு முறை மட்டுமே எழுத வேண்டும்.
2. ஒவ்வொரு கிடைமட்ட (Row) வரிசையிலும் 1 முதல் 9 வரையுள்ள எண்கள் ஒரு முறை மட்டுமே வர வேண்டும்.
3. ஒவ்வொரு நெடு (column) வரிசையிலும் 1 முதல் 9 வரையுள்ள எண்கள் ஒரு முறை மட்டுமே வர வேண்டும்.

**சுடோகு புதிர் 1 இன் விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 7 | 2 | 8 | 9 | 5 | 4 | 6 | 1 |
| 4 | 6 | 5 | 1 | 3 | 2 | 8 | 7 | 9 |
| 8 | 9 | 1 | 4 | 6 | 7 | 3 | 5 | 2 |
| 1 | 4 | 6 | 2 | 8 | 9 | 5 | 3 | 7 |
| 9 | 8 | 3 | 5 | 7 | 1 | 2 | 4 | 6 |
| 5 | 2 | 7 | 3 | 4 | 6 | 9 | 1 | 8 |
| 7 | 5 | 9 | 6 | 2 | 3 | 1 | 8 | 4 |
| 6 | 1 | 8 | 9 | 5 | 4 | 7 | 2 | 3 |
| 2 | 3 | 4 | 7 | 1 | 8 | 6 | 9 | 5 |

சுடோகு புதிரை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி

**சுடோகு புதிர் - 3**
**தினச்செய்தி**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



# குறுக்கெழுத்துப் போட்டி - 5

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 5**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | ■ | 3 | 4 |
| | ■ | 5 | 6 | ■ | |
| 7 | | ■ | 8 | 9 | |
| | ■ | 10 | | | ■ |
| 11 | 12 | | ■ | 13 | 14 |
| ■ | 15 | | | ■ | |

**இடமிருந்து வலம்**

1. கடவுளுக்குச் சாத்துவது.
3. மீன் இனங்களில் ஒன்று.
5. வடஇந்தியப் பண்டிகை.
7. எண் சாண் உடம்புக்கு இது பிரதானம்.
8. இது பாதாளம் வரை பாயும். (குழம்பியுள்ளது)
10. விநாயகர் விரும்பும் புல்
11. பூட்டான் தலைநகரம் (குழம்பியுள்ளது)
13. பனைக்கு இது இல்லை.
15. தபால் நிலையத்தில் இதை அனுப்ப முடியாது. (குழம்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

1. இரு பக்கமும் அடி வாங்குவது.
2. யுத்தம் (தலைகீழ்)
4. கராம்பில் இது விலை கூடியது. (தலைகீழ்)
6. நீர் அள்ளும் இடம்.
9. பிரபுவின் மகன் நடித்த படம் (குழம்பியுள்ளது)
10. பிரதம விருந்தினர்
12. ஹிந்தி நடிகை (தலைகீழ்)
14. முகமாலைக்கு அருகிலுள்ள நகரம்.

**குறுக்கெழுத்துப்போட்டி -2 இன் விடைகள்**

**இடமிருந்து வலம்**
1. வரி
4. காந்தம்
7. அநீதி
8. தனி
9. கல்வி
10. பல்லி

**மேலிருந்து கீழ்**
1. வலை
2. சந்தி
3. அம்மி
4. காந்தி
6. கதவு
7. அல்லி
9. கல்

**சரியான விடையை எழுதியவர்கள்**

1. மயில் வேலாயுதபிள்ளை, உபதபால் வளவு, புளியம்பொக்கணை.
2. ம. தர்சனா, கோப்பாய் வீதி, கோப்பாய்.
3. பா. ஸ்ரீராம், முகமாலை.
4. எம். அபராஜிதன், மூளாய்.
5. ஆர். சாய்குமார், தொண்டைமானாறு வீதி, அச்சுவேலி.

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் ஜுன் 16 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 18.06.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

பெயர் : ..............................
முகவரி : ..............................
..............................


**குறுக்கெழுத்துப் போட்டி இல. 5**
**தினச்செய்தி வாரமலர்,**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**



# பூ ஒன்று புயலானது

பாலிவுட் கவர்ச்சிப் புயல் அலியா பட் இதுவரை நடித்த படங்களில் எல்லாம் கவர்ச்சியாகவே நடித்து வந்திருக்கிறார். இதற்கு நேர்மாறாக 'உத்தா பஞ்சாப்' படத்தில், பழங்குடி இன விளையாட்டு வீராங்கனையாக நடிக்கிறார். சிலரால் பாலியல் பலாத்காரம் செய்யப்படும் அலியா பட் அதனை எதிர்த்துப் போராடும் துணிச்சலான பெண்ணாக நடித்திருக்கிறாராம். ஷாகித் கபூர் போதைக்கு அடிமையான ராக்ஸ்டாராக நடித்திருக்கிறார், இருவருக்கும் சிகிச்சை அளிக்கும் டாக்டராக கரீனா கபூர் நடித்திருக்கிறாராம்.







# தனுஷுடன் நடிக்க வெயிட்டிங்!"

'மான் கராத்தே' படத்தில் தன் மழலைப் பேச்சாலும் கியூட் நடிப்பாலும் தனியாகத் தெரிந்த மாயா, தற்போது 'டார்லிங்-2' 'உன்னோடு கா' என அடுத்தடுத்த படங்களில் ஹீரோயினாக நடிக்கிறார். சென்னைப் பொண்ணு நான். ஸ்கூல், நடிகையாகணும்னு எல்லாம் பண்ணலை. ஃப்ரெண்ட்ஸ்கூட ஜாலிக்கு பண்ணினது. நான் ஒரு பல் டாக்டர். என் ஃப்ரெண்ட்தான் 'மான் கராத்தே' ஆடிஷனுக்குக் கூட்டிட்டுப் போனான். எப்படியோ செலெக்டாகி நடிகை ஆகிட்டேன்."

"சும்மா வந்து பாட்டுப் பாடிட்டு டான்ஸ் ஆடிட்டுப் போகிற ரோல்ஸ் மாதிரி இல்லாம, ஆழமான கதாபாத்திரங்கள்ல நடிக்கணும்னு ஆசை."நடிக்க வர்றதுக்கு முன்னாடியே அவரோட பெரிய ஃபேன் நான். ரொம்ப அழகா, இயல்பா நடிப்பார். அவர்கூட நடிக்க நான் வெயிட்டிங்." ?"

சின்ன வயசுல இருந்தே டாக்டராகணும்ங்கிறது என் கனவு. இப்போ ஒரு சின்ன பிரேக் விட்டு இருக்கேன். அதே சமயம் சினிமாவும் எனக்கு ரொம்பப் பிடிச்ச விஷயம். அதனால் இப்போதைக்கு இரண்டையும் பேலன்ஸ் பண்ணிப் போயிக்கிட்டு இருக்கேன். வருங்காலத்துல படிப்பா, நடிப்பானு வந்தா, பார்த்துக்கலாம்.

# வாய்ப்பை தட்டிப்பறித்த சமந்தா!

தெலுங்கு படங்களில் மீண்டும் நடிக்க துவங்கியிருக்கும் நயன்தாரா, பாலகிருஷ்ணாவின் நூறாவது படத்தில், தற்போது, நடித்து வருகி றார். இதையடுத்து, சிரஞ்சீவியின், 150வது படத்தில் அவர் நடிப்பதாக இருந்தது. ஆனால், அப்படம், விஜய் நடித்த, கத்தி படத்தின் ரீ - மேக் என்பதால், தமிழில், கத்தி படத்தில் நடித்த சமந்தா, சிரஞ்சீவியை சந்தித்து, 'கத்தி தமிழ் படத்தில் நடித்த நான் தான் தெலுங்கிலும் நடிப்பேன்.' என்று அடம்பிடித்து, அவ்வாய்ப்பை கைப்பற்றி விட்டார். இதனால், அப்படத்திற்கான பேச்சுவார்த்தையில் இருந்த நயன்தாரா, சிரஞ்சீவி பட வாய்ப்பை இழந்து விட்டார்



## பிரபு 200



நடிகர் திலகம் சிவாஜி கணேசனி ன் 200வது படம் திரிசூலம் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் அவருடைய மகன் இளையதிலகம் பிரபுவின் 200வது படமாக 'மீன் குழம்பும் மண் பானையும்' என்ற படம் அமைந்துள்ளது. இந்த தகவலை பிலிம்ஸ் நியூஸ் ஆனந்தன் மரணத்திற்கு ன்னர் தன்னிடம் கூறிய பிரபு தெரிவித்துள்ளார். ஜெயராம் காளிதாஸ், னா ஜாவேரி, மற்றும் சிறப்பு தோற்றத்தில் கமல்ஹாசன் நடித்துள்ள இந்த டத்தை ராம்குமாரின் மகன் துஷ்யந்த் தயாரித்துள்ளார். இந்த படத்தின் பெரும்பாலான ததியின் படப்பிடிப்பு மலேசியாவில் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## இடுப்பழகை புதுப்பித்த இலியானா



அகன்ற இடுப்பழகு, ரம்பா போன்ற தொடை அழகு இலியானாவை தென்னிந்திய ரசிகர்களின் மனதில் பச்சக்கென ஒட்ட வைத்தது. பாலிவுட் வாய்ப்புக்காக அந்த அழகை குறைத்து ஸ்லிம் ஆனார். அது கைகொடுக்கவில்லை. இலியானாவின் பழைய கிளாமரை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு அவரை ஒப்பந்தம் செய்யச் சென்ற சில தென்னிந்திய இயக்குனர்கள் ஒல்லி தோற்றத்தை பார்த்து எஸ்ஸாகிவிட்டனர். தென்னிந்திய சினிமாவில் மீண்டும் மார்க்கெட் பிடிக்க முடிவு செய்தார் இலியானா.

அனுஷ்கா, தமன்னா, திரிஷாவுக்கு மார்க்கெட் உச்சத்துக்கு சென்ற பின், ஒரு வீழ்ச்சி ஏற்பட்டது. பிறகு மீண்டும் அவர்களுக்கு மார்க்கெட் எகிறியதை எண்ணிப்பார்த்த இலியானா. தென்னிந்திய திரையுலகில் விட்ட இடத்தை பிடிக்க தனது இடுப்பழகு, தொடை அழகையும் மீண்டும் வரவழைக்க முடிவு செய்தார்.

. சமீபத்தில் மும்பையில் நடந்த ஷூ நிறுவன திறப்பு விழாவில் புதிய தோற்றத்தை வெளிப்படுத்தும் வகையில் டைட்டாக ஜீன்ஸ் பேண்ட் அணிந்து வந்தார்

## அஜித்துடன் ஜோடி சேரும் காஜல் அகர்வால்



வீரம்', 'வேதாளம்' படத்தை அடுத்து மீண்டும் சிறுத்தை சிவா இயக்கத்தில் அஜித் நடிக்க இருக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்க இருக்கிறது. இன்னும் பெயரிடப்படாத இப்படத்தை 'தல 57' என்று அழைத்து வருகிறார்கள். இப்படத்திற்கு அனிருத் இசையமைக்க இருக்கிறார். இப்படத்தில் அஜித்துக்கு ஜோடியாக இரண்டு கதாநாயகிகள் நடிக்க இருப்பதாக செய்திகள் வெளியாகியுள்ளது. இதில் ஒன்று அனுஷ்கா என்று கூறிவந்த நிலையில், மற்றொரு நடிகையாக காஜல் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. சமீபத்தில் காஜல் அளித்த பேட்டி ஒன்றில், 'நான் விக்ரமுடன் 'கருடா' படத்திலும் அஜித்துடன் ஒரு படத்திலும் நடிக்க இருப்பதாக கூறியிருக்கிறார்.

## ரசிகர்களை விரட்டிய கபாலி நாயகி



எவ்வளவு சர்ச்சைகள் வந்தாலும் அதைப்பற்றிக் கவலைப்படாமல் தன் வழியில், தன் வேலையை மட்டும் பார்க்கும் நடிகைதான் 'கபாலி' ராதிகா ஆப்தே. சமீபத்தில் சில ரசிகர்களைத் திட்டி அவர்களோடு சண்டை போட்டிருக்கிறார். அவர் திட்டியது, அவரோடு செல்ஃபி எடுக்க அவரைப் பின் தொடர்ந்த ரசிகர்களைத்தான். 'என் ரசிகர்கள் என்று பொய் சொல்லி செல்ஃபி கேட்டார்கள், நான் நடித்த மூன்று படங்களின் பெயர்களைக் கேட்டால்கூட அவர்களுக்குத் தெரியவில்லை. என் சினிமா கவர்ச்சியை மட்டும் பார்த்து போட்டோ எடுக்க வந்தால், எனக்கு சுத்தமாகப் பிடிக்காது' என்று கடுப்பாகக் கூறியிருக்கிறார்.

## "ஏ" படத்தில் சிம்பு



அடங்காதவன்' படத்தின் படப்பிடிப்பும் விரைவில் தொடங்கவுள்ளது. ஆதிக் ரவிச்சந்திரன் இயக்கத்தில் உருவாகவுள்ள இந்த படத்தின் கதை அடல்ட் சம்பந்தப்பட்ட கதை என்பதால் இந்த படத்திற்கு சென்சாரில் 'ஏ' சர்டிபிகேட் தான் கிடைக்கும் என படக்குழுவினர் இப்போதே பேசி வருகின்றனர். இதனால் இந்த படத்தை குழந்தைகள் பார்க்க முடியாது என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே ஆதிக் ரவிச்சந்திரனின் முதல் படமான 'த்ரிஷா இல்லைனா நயன்தாரா' படத்திற்கும் சென்சார் அதிகாரிகள் 'ஏ' சர்டிபிகேட்தான் கொடுத்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.






# அலுவலகத்தில் எப்படி நடந்து கொள்வது?

இன்றைய சூழலில் ஆணும் பெண்ணும் சேர்ந்து வேலை செய்வது என்பது தவிர்க்க இயலாதது. இப்படிப்பட்ட சூழலில் சக ஆண்களிடம் இருந்து பிரச்சினைகள் வராமல் இருக்கவேண்டுமெனில் அவர்களிடம் நாம் எப்படி நடந்து கொள்ளவேண்டும்.

நம் உடைகள் எதிரிலிருப்பவரின் உணர்வுகளைத் தூண்டாமல் இருப்பது நல்லது. அதனால்தான் ஆள் பாதி ஆடை பாதி என்றார்கள். மாடர்ன் ஆக உடுத்தினாலும்கூட, நேர்த்தியாக உடுத்துங்கள்.

முக்கியமாக உடன் வேலை பார்க்கும் ஆண்களிடம் நம்முடைய சொந்த விஷயங்களை பங்கு போடாதீர்கள். அங்கேதான் ஆரம்பிக்கிறது பல பிரச்சினைகள். சொந்த குடும்ப விஷயங்களுக்கு உடன் வேலை பார்க்கும் ஆண்களிடம் ஐடியாக்களைக் கேட்காதீர்கள். அட்வான்டேஜ் எடுக்க முன் வருவார்கள்!

உடன் வேலை செய்தாலும் உங்களின் தொலைபேசி இலக்கங்களை நம்பிக் கைக்குரிய நபர்களை தவிர யாருக்கும் தராதீர்கள்.

சில நேரங்களில் உயர் அதிகாரிகளே தொல்லைகள் தருவார்கள். எடுத்தேன் கவிழ்த்தேன் என்று ஹாண்டில் செய்யாமல், பிரச்சினைகள் தீரும் வகையில் மிக ஜாக்கிரதையாகக் கையாளுங்கள். உயர் அதிகாரிகளுக்கு ஒத்துழைக்கவில்லை என்றால் அவர்களின் பழிவாங்கும் படலம் உங்கள் வேலைகளில் குறை கண்டுபிடிப்பதில் ஆரம்பிக்கும். அதனால் முடிந்தவரை வேலைகளில் தவறு செய்யாதீர்கள்.

ஆண் நண்பர்களிடம் கை குலுக்குவது தவறல்ல. அதற்காக எல்லாவற்றுக்கும் கை கொடுப்பது, தொட்டுப் பேசுவது கூடாது.

உங்களின் பொருளாதார இயலாமை நிலையை உடன் பணிபுரியும் ஆண்களிடம் கூறாதீர்கள்.

அலுவலகம் என்பது பணிபுரிய மட்டுமே. உங்களது தனிபட்ட விருப்பங்களுக்கும் குடும்ப பிரச்சினைகளுக்கும் ஏற்ற இடம் அது அல்ல என்பதை நீங்கள் முதலில் உணரவேண்டும்.

நட்பு ரீதியாக புன்னகைக்கலாம். ஆனால் காரணமில்லாமல் எல்லாவற்றுக்கும் ஆண்களிடம் சிரிக்காதீர்கள்.

ஒரு ஆணிடம் கை குலுக்குதல், தேநீர் பருகுதல், இரவு நேரத்தில் வாகனத்தில் செல்லுதல். இவையெல்லாம் நம் அக்கம்பக்கத்தினரால் கூர்மையாக கண்காணிக்கப்படும் விஷயங்கள் என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்!

ஒரு ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள தனிப்பட்ட இயல்பு, மனமெச்சூரிட்டி போன்றவற்றைப் பொறுத்து ஆணிடம் பெண்கள் பழகலாம். ஆனால் பொதுவான ஆண்கள் சமூகம் என்பது பெண்ணை வித்தியாச மான அங்க அவயங்கள் கொண்ட சதைப் பிண்டம் என்றே நினைக்கிறது. ஒரு ஆண் தன்னுடன் வேலை செய்யும் பெண்களை தங்களுடன் வேலை செய்யும் மற்ற ஆண் பணியாளர்களை போல எப்போது நினைக்கிறானோ அப்போதுதான் அவனோடு பணிபுரியும் இடங்களில் பெண்கள் பாதுகாப்பாக இருப்பார்கள்.

வேலைத்தளத்தில் குறிப்பாக எந்தவொரு ஆணுடனும் தாழ்வான ரகசியக் குரலில் பேசாதீர்கள். இது கேட்பவர்களுக்கும், பார்ப்பவர்களுக்கும் தப்பான அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். உங்கள் ஆடை பற்றி (அ) உங்களுக்கு உள்ள திறமை பற்றி பாராட்டும்போது "நன்றி" என்று ஸ்ட்ரெய்டாக சொல்லுங்கள். தேவையில்லாமல் வெட்கப்படுவதைத் தவிருங்கள்.

யாரிடம் பேசினாலும் கண்ணைப் பார்த்துப் பேசுங்கள். அவர்களையும் அப்படியே பேச அனுமதியுங்கள்.

அரட்டையில், ஜோக்ஸ் என்ற பேரில் விரச பேச்சுகளை அனுமதிக்காதீர்கள்.

எந்த ஆணாவது உங்களிடம் தவறாக நடந்து கொண்டால், முதலில் நீங்களே இரண்டொரு முறை எடுத்துச் சொல்லி கண்டித்துப் பாருங்கள். அப்படியும் தொடர்ந்தால் உங்கள் மேலதிகாரியிடம் புகார் செய்யுங்கள்.

விழா, விசேஷம் தவிர உடன் வேலைப் பார்க்கும் ஆணை தேவையில்லாமல் வீட்டுக்கு அழைக்காதீர்கள். நீங்களும் செல்லாதீர்கள்.

ஆண்கள், தனது மனைவியை உங்களோடு ஒப்பிட்டு பேசுவதையோ அல்லது அவளுக்கு ஒண்ணுமே தெரியாது என்று மதிப்பை குறைத்துப் பேசுவதையோ அனுமதிக்காதீர்கள்.

ஆண் எந்த நோக்கத்திற்காக உங்களிடம் பேசுகிறான் என்று அவன் நோக்கத்தை அவன் வார்த்தைகளிலும் கண்களிலும் இருந்து பெண்கள் புரிந்து கொள்ள வேண்டும். அதைப்பொறுத்தே ஒரு பெண் ஆணிடம் பழகும்போது அந்த உறவை எவ்வளவு தூரத்தில் வைக்கலாம் என்று வரைமுறைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பெண்களுக்கு தங்கள் விஷயங்களை பகிர்ந்துகொள்ள நட்பு ரீதியிலான பழக்கம் ஆணிடமோ, பெண்ணிடமோ ஏற்படுவது இயல்பானதுதான். ஆனால் அது அவளது சுயகௌரவத்தை எந்த வகையிலும் பாதிக்காத வகையில் இருக்கவேண்டும். அதுவே பாதிப்புகளை ஏற்படுத்தாது. அதுவே நிலைக்கும்!



# கண் தானம் செய்யுங்கள்

ஒருவர் இறந்து 4-6 மணி நேரத்துக்குள் கண்தானம் செய்யப்பட வேண்டும்.

அங்கீகாரம் பெற்ற மருத்துவர் மட்டுமே கண்களை இறந்த நபரிடம் இருந்து எடுக்கலாம்.

கண் தானம் செய்ய 20-30 நிமிடங்கள் போதும்.

இறந்த நபரிடம் இருந்து இரத்த மாதிரி பெறப்பட்டு அவருக்கு தொற்றுநோய்கள் ஏதாவது உள்ளதா என் பது பரிசோதிக்கப்படும்.

கண் புரை அறுவைச் சிகிச்சை செய்தவர்கள், குளுக்கோமா மற்றும் மூக்குக் கண்ணாடி அணிபவர்கள் கண் தானம் செய்ய முடியும்.

**கண் தானம் செய்ய முன்பு :**

முதலில் இறந்தவரின் கண் இமைகளை உடனே மூட வேண்டும்.

மின்விசிறியை நிறுத்திவிட வேண்டும்.

இறந்த நபரின் தலையை ஒரு தலையணை கொண்டு உயர்த்தி படுக்க வைத்தல் வேண்டும்.

அருகில் இருக்கும் கண் வங்கிக்கு உடனடியாக தொடர்பு கொண்டு விரைவாகவும் எளிதாகவும் வந்து சேரும் வகையில் தகவல் தெரிவிக்க வேண்டும்.

இறந்த நபரின் இரத்த உரித்தான உறவினரின் ஒப்புதல் மற்றும் இரண்டு பேரின் சாட்சியுடன் கண்தானம் செய்ய முடியும்.

**யார் கண்தானம் செய்ய முடியாது?**

நாய்க் கடியால் இறந்தவர்கள், டெட்டானஸ், எய்ட்ஸ், மஞ்சள் காமாலை, புற்று நோய், மூளைக்கட்டி, உணவு விஷத்தினால் இறந்தவர்களிடம் இருந்து கண் தானமாக பெற்றுக் கொள்ள முடியாது.

ஒருவரின் கண்தானம் இருவருக்கு கண் ஒளியைப் பெற்றுக் கொடுக்கும்.



# என்னைக் கேளுங்கள்

வடை இரண்டு நாட்களிலேயே 'கடுக்' என்று ஆகிவிடுகிறது. அதை வீண் செய்யவும் பிடிக்கவில்லை என்ன செய்யலாம்?

ரசத்தில் ஊற வைத்து பிறகு வெளியே எடுத்து சாப்பிட்டால் "கடுக்" என்றில்லாமல் மிகவும் மிருதுவாக இருக்கும்.

மிளகாய் வறுக்கும் போது ஒரே நெடியாக இருக்கிறது. அடுக்குத் தும்மலும் வந்து விடுகிறது. இதைத் தவிர்க்க வழி சொல்லுங்கள் மேடம்?

மிளகாய் வற்றலை வறுக்குமுன் இதனுடன் அரை ஸ்பூன் சாதாரண உப்பைச் சேர்த்து வறுத்தால் (ஒரு டேபிள் ஸ்பூன்) மூக்கைத் துளைக்கும் நெடி வராது.


வீட்டில் தயாரிக்கும் பனீர், கடைகளில் விற்பது போல் கட்டியாக ,ருப்பதில்லையே? ஏன்?


பால் திரிந்து பனீரை ஒரு துணியில் வடிகட்டியதும், அதை துணியுடனே குளிரந்த நீரில் கழுவவும். பிறகு துணியுடனே ஒரு தட்டில் வைத்து, அதன் மேல் மார்பிள் சப்பாத்திக் கல் அல்லது இடிக்கும் சிறிய உரல் வைத்து, ஒரு மணி நேரம் கழித்து துணியை எடுத்து விட்டு துண்டுகள் போடவும். அழகாக சதுர வடிவத் துண்டுகளாக கடைகளில் கிடைப்பது போலவே வரும்.

சேமியா உப்புமா செய்யும்போது சேமியா ஒன்றுடன் ஒன்று ஒட்டிக் கொள்கிறதே? இதைத் தடுப்பது எப்படி?

சேமியா வாங்கியவுடன், அதை வெறும் வாணலியில் சிறிது வறுத்து, ஆறியவுடன், ஒரு டப்பாவில் எடுத்துவைத்து சேமியா உப்புமா செய்யும்போது பயன்படுத்தினால் ஒன்றுடன் ஒன்று ஒட்டாது.






ஓர் ஊரில் பணக்காரன் ஒருவன் இருந்தான். அவன் ஒருநாள் தூங்கி எழுந்ததும் விடியற்காலையில் ஜோடியாக உள்ள காக்கைகளைக் கண்டால் அன்றைக்கு நல்ல அதிர்ஷ்டம் உண்டாகும் என்று கேள்விப்பட்டான். தான் ஜோடிக் காக்கைகளைக் காலையில் எழுந்ததும் காண வேண்டும் என்ற எண்ணம் கொண்டான்.


அவ்வாறு எண்ணம் கொண்ட அப்பணக்காரன் தன் வேலைக்காரனை அழைத்து ""நீ விடியற்காலையில் ஜோடிக் காக்கைகளைப் பார்த்து வந்து என்னை எழுப்பு" என்று கூறினான். அவ்வேலைக்காரன் மறுநாள் விடியற்காலையில் ஓர் இடத்தில் ஜோடிக் காக்கைகள் இருப்பதைப் பார்த்தான். உடனே ஓடிச்சென்று தன் எஜமானனை எழுப்பினான்.

அப்பணக்காரன் படுக்கையிலிருந்து எழுந்து சென்று பார்க்கும்பொழுது அங்கே ஒரு காக்கை மட்டும் இருந்தது. மற்றொரு காக்கை பறந்து போய்விட்டது.ஒரு காக்கையை மட்டும் பார்த்த பணக்காரன் கோபம்கொண்டு ""மற்றொரு காக்கை பறந்து செல்வதற்கு முன்னால் என்னை வந்து ஏன் எழுப்பவில்லை" என்று சொல்லிக்கொண்டே வேலைக்காரனை அடித்தான். அப்போது அந்த வேலைக்காரன் ""எஜமானனே விடியற்காலையில் ஜோடிக் காக்கைகளைப் பார்த்ததால் எனக்கு உண்டான அதிர்ஷ்டத்தைப் பார்த்தீர்களா? உங்களிடம் அடிவாங்கியதுதான் அதிர்ஷ்டம்" என்று கூறினான்.அதைக் கேட்ட பணக்காரன் ""ஆமாம்" என்று சொல்லி அடிப்பதை நிறுத்தி விட்டான். உண்மை உணர்ந்து அவனிடம் மன்னிப்புக் கேட்டான்.




தோசை அம்மா தோசை
அம்மா சுட்ட தோசை!
அரிசி மாவும் உளுந்து மாவும்
கலந்து சுட்ட தோசை!
அப்பாவுக்கு நாலு
அம்மாவுக்கு மூன்று
அண்ணனுக்கு இரண்டு
பாப்பாவுக்கு ஒன்று
திங்க திங்க ஆசை
இன்னும் கேட்டால் பூசை!

## காந்த ரயில்கள்



ரயில் வண்டிகள் சக்கரங்களை கொண்டு தண்ட வாளத்தில் ஓடுவதை தான் நீங்கள் பார்த்திருக்க முடியும்.ஆனால் சில ரயில்கள் சக்கரங்கள் இல்லாமலே ஓடுகின்றன. இதில் ஆச்சரியமான விக்ஷயம் என்னவென்றால் அவை உண்மையிலேயே மிதக்கின்றன! நாம் அவற்றை 'காந்தப்புகைவண்டி" (Magnetic trains)என்று அழைக்கிறோம்.

காந்தவண்டிகள் மிக சக்தி வாய்ந்த காந்தக் கல்லை ரயிலிலும் தண்டவாளத்திலும் கொண்டிருக்கும். ரயில் ஒரு மோட்டரைக்கொண்டிருக்கும். அந்த மோட்டார் ஒரு காந்த அலையை உருவாக்கும். இந்த அலையினால் ரயில் தண்டவாளத்தைத் தொடாமல் கொஞ்சம் மேலே மிதக்கும் இதனால் ரயிலுக்கு தண்டவாளத்திற்கும் நடுவில் உராய்வு ஏற்படாததால் ரயில் ஒரு மணிநேரத்தில் 500கி.மீ வரை செல்ல முடியும்.

காந்த ரயில் வண்டிகள் ஆடாமல் அமைதியாகச் செல்கிறது. மற்ற போக்குவரத்து சாதனங்களைவிட இது குறைந்த சக்தியை உபயோகித்து அதில் ஆற்றலை வெளியிடுகிறது.இங்கிலாந்து ஜெர்மனி மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் இம்மாதிரியான ரயில்களை உருவாக்கி வருகின்றது.




*சினிமா தியேட்டருக்கும், ஆபரேசன் தியேட்டருக்கும் என்ன வித்தியாசம்?*
*டிக்கெட் வாங்கிட்டு உள்ள போனா சினிமா தியேட்டர். உள்ள போயி டிக்கெட் வாங்கிட்டா ஆபரேசன் தியேட்டர்.*

# உலகம் கூகிள் கையிலா

## சுந்தர் பிச்சையின் கையிலா?



அப்பிள் நிறுவனத்தில் மறைந்த Steve Jobs எவ்வளவு பிரபலமோ இன்று கூகிள் என்றவுடன் பிச்சைசுந்தரராஜன் என்ற இயற்பெயர் கொண்ட சுந்தர் பிச்சை ஞாபகத்துக்கு வந்துவிடுகிறார். கடந்த ஆகஸ்ட் 10ம் திகதி கூகுள் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியாக நியமனம் பெற்றுள்ள சுந்தரம் பிச்சை ஒரு தமிழர் என்பதற்காக நாம் பெருமைப்பட்டுக்கொள்ளும் அதே வேளை கூகுள் நிறுவனம் சிறந்த துடிப்புள்ள தலைவரை பெற்றமைக்காக பெருமை கொள்கிறது.

தமிழ் நாட்டில் சென்னையில் 1972இல் லக்ஸ்மி மற்றும் ரகுநாத பிச்சை ஆகியோருக்கும் மகனாக பிறந்த சுந்தர் பிச்சை தனது பட்டப்படிப்பினை இந்தியாவில் IIT யில் முடித்து பட்டபின்படிப்பை அமெரிக்காவின் ஸ்ரான்போர்ட் பல்கலைக்கழகத்திலும் பென்சல்வேனியா பல்கலைக்கழகத்திலும் தொடர்ந்தார்.

இளமை காலத்தில் படிப்பில் எந்த அளவு ஆர்வம் இருந்ததோ அதே அளவுக்கு விளையாட்டிலும் ஆர்வம் இருந்தது. பள்ளிக்கூடகிரிக்கெட் அணிக்கு தலைமை தாங்கிய அவர்

பிராந்தியங்களுக்கிடையிலான போட்டிகள் பலவற்றில் வெற்றிபெற்றிருக்கிறார். பள்ளிக்காலத்திலிருந்தே தொலைபேசி எண்களை நினைவில் வைத்திருப்பதில் சுந்தர் பிச்சைக்குத் தனித் திறமை இருந்துவந்தது. இரு அறைகளை கொண்ட வீட்டில் வசித்துவந்த சுந்தர்பிச்சையின் வீட்டில் சொந்தமாக டிவி கார் போன்றவை இருந்திருக்கவில்லை. ஆனால் சுந்தர் பிச்சையின் தந்தை தன் மகன்களின் கல்வியில் கூடுதல் கவனத்தைச் செலுத்தி வந்தார். சுந்தர் பிச்சையின் தந்தை ரகுநாத பிச்சை வேலை முடிந்து வீட்டுக்கு வந்த பிறகு அன்று தன் வேலையில் தான் எதிர்கொண்ட சவால்கள் குறித்து மகன்களிடம் பேசுவதை வழக்கமாகக் கொண்டிருந்ததாகக் கூறுகிறார்.பிச்சை தனது கூகுளுடனான தொழில் பயணத்தினை 2004 இல் ஆரம்பித்தார். அதன் போது Google chrom இணைய உலாவி (internet Browser) மற்றும் Chroms OS எனப்படும் கூகிள் இயங்குதளத்தின் முன்னோடி அவர் தான். உண்மையில் இணைய உலவிகளில் கூகிள் தேடுதலை எளிமையாக்க உதவும் ' ரூல்பார்" உருவாக்கும் ஒரு சிறிய அணியில் தான் பிச்சைக்கு பணி கிடைத்தது.

ஆனால் நாம் ஏன் மற்ற இணைய உலவிகளின் பின்னால் அலையவேண்டும் நாமே ஒரு இணைய உலாவி உருவாக்கலாமே என தனது அதிகாரிகளிடம் பிச்சை தெரிவித்தார். முதலில் இது தேவையில்லாத வேலை என கூகுள் நினைத்தது. ஆனால் அதன் பலன்களை எடுத்துச் சொல்லி இணைய உலாவி உருவாக்கும் திட்டத்திற்கு வலு சேர்த்தார்.அடுத்த ஓராண்டில் பிச்சையின் குழு கூகுள் குரோமை வெளியிட்டது. இப்போது உலகில் 32 சதவீதம் பயன்படுத்தப்படும் பிரவுசர் குரோம் தான்.

Chromebook, Gmail ,Google Map மேம்படுத்தல்களிலும் பாரிய பங்களிப்புக்களை செய்தார். Web M என்ற பெயரிலான காணொளி வகையினை அறிமுகப்படுத்தினார். பின்னர் 2013 இல் Anroid இயங்குதளத்தினை கூகிள் தயாரிப்பாக கொண்டு வந்தார். ஆன்ரோயிட்பகுதியை முழுமையாக நிருவகித்த பிச்சைக்கு 2014இல் கூகிளின் உற்பத்திப்பகுதி தலைமைப்பதவி அப்போதைய தலைமை நிறைவேற்று அலுவலரான லாரி பேஜ்(Larry Page) இனால் வழங்கப்பட்டிருந்தது. பின்னர் 2015 ஆகஸ்ட்டில் கூகிளின் நிறுவுனர் லாரி பேஜ் (Larry Page) கூகிள் நிறுவனத்தினை உள்ளடக்கிய குழு நிறுவனமான அல்பாபெற் நிறுவனத்தலைவராக பொறுப்பேற்றதும் சுந்தர் பிச்சை அதன் கீழ் வந்த கூகிள் நிறுவனத்தின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

சுந்தர் பிச்சை பற்றி கூகிள் முன்னைநாள் தலைவரும் நிறுவுனருமான லாரிபேஜ்( Larry Page) கூறுகையில் " சுந்தர் பிச்சை தொழில்நுட்ப ரீதியில் சிறந்ததும் பயன்பாட்டுக்கு இலகுவானதுமான புதிய உற்பத்திகளை உருவாக்குவதில் தலைசிறந்தவராக காணப்பட்டார். அவர் குரோம் வெளியிட்ட 2008 காலப்பகுதியில் இன்னும் ஒரு இணைய உலாவி தேவைதானா என்று பலராலும் கேட்கப்பட்டிருந்தது. ஆயினும் இன்று அது பாதுகாப்பு மற்றும் இலகுதன்மை போன்றவற்றின் காரணமாக பல நூற்றுக்கணக்கான மில்லியன் பயனாளர்களை கவர்ந்துள்ளது இதுவே பிச்சையின் திறனுக்கு சான்று என்று குறிப்பிட்டார்". 2011இல் இருந்து Twitter நிறுவனம் பிச்சையினை தன்பக்கம் இழுக்க முயற்சித்தது. 2014 ஆண்டு காலப்பகுதியில் அவர் Microsoft நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட உள்ளார் என்று ஒரு வதந்தி பரவியிருந்தது என்ற பொழுதிலும் அது நடைபெறவில்லை. சுந்தர் பிச்சை கூகிளை விட்டு வெளியேறவில்லை. அதன் பலன்களை இன்று அவர் அனுபவிக்கிறார். உலகமே கூகிள் கையில் என்று சொல்வதற்கு பதில் உலகமே சுந்தர் பிச்சையின் கையில் என்று சொன்னால் அது மிகையாகாது.

## போட்டிச் சிறுகதை 4




பெயர் : திருமதி.ஜமுனாராணி. செந்தில்பாலன்
முகவரி: 'வீரகேசரி' நாவற்காடு அச்சுவேலி.
சிறுகதை : ஏழைகள் அழுவதில்லை

அந்த முதல்நாளே எனக்கு அந்த ரிச்சரை பிடித்துவிட்டது. ஏணென்டால் அவ என்ரை அம்மா மாதிரி.

"அம்...... மா......."

சிதறி சின்னாபின்னமாகிய கொஞ்ச தசைக்குவியல். நான் கடைசியா பார்த்த



அம்மா! எனக்கு நெஞ்சமெல்லாம் பிசைந்து ஏதோ செய்தது.

என்ரை அம்மாவை நான் அந்தக் கோலத்திலை பாத்திருக்கக்கூடாது. என்னையறியாமல் என் கண்களிலிருந்து கோடு போட்ட நீரைத் துடைத்துக் கொள்கிறேன்.

அந்தக்கடைசிக் கணம்கூட அம்மா என்னை கோழிக்குஞ்சை கோழி செட்டையுக்கை வைச்சிருந்த மாதிரி வைச்சிருந்தா.

என்ரை அம்மாவுக்கு இப்பிடி ஒரு நிலை வருமெண்டு ........................................ ............. எனக்கு இன்னும் தான் அதை நம்பமுடியாமல் கிடக்கு.

உடம்பு லேசா நடுங்கிற மாதிரி முகமெல்லாம் வேர்த்து விறுவிறுத்து ..................... கையால் முகத்தை ஒரு தடவை துடைத்து காற்சட்டையில் துடைத்துக் கொள்கிறேன்.

காற்சட்டை மட்டுமென்ன அடுத்த வரியம் புதுச்சீருடை தருமட்டும் போட்டிருக்க வேண்டியது தான். இரண்டு மூண்டிடத்திலை பொத்தல் விழுந்திட்டுது.

பக்கத்து வீட்டிலை தையல் ஊசியும் நூலும் கடன் வாங்கி அப்பப்பா......... அந்த தையல் ஊசி தாறத்துக்கிடையிலை அந்த அக்கம்மா கிழவி எத்தினை பக்குவம் 'பொழுதுபட்டால் தரமாட்டன் இது பெரிய கண் ஊசி. நான் கனகாலமாக வைச்சுத்தைக்கிறன். எனக்கு நூல் கோக்க சுவம். உடனை கொண்டந்திடு மோனை என்ரை சீலையிலும் இரண்டு மூண்டிடத்திலை புள்ளல் விழுந்திட்டுது தைக்க வேணும்"

"ம்".

இந்த கிழவியிட்டை ஊசி வேண்டிறதை விட நான் ஓட்டைக்காற்சட்டையோடை போய் அவமானப்படலாம். என்ரை அம்மா இருந்தா நான் ராசா மாதிரி இருந்திருப்பன்.

என்ரை குழந்தைப்பிள்ளை படமொண்டு அப்பான்ரை பேசுக்கை கிடக்கு. அம்மா என்னை தூக்கி வைச்சிருக்கிறா. தலைவாரி இழுத்து நல்ல பெரிய பொட்டு வைச்சு வடிவான சேட்டு காற்சட்டை போட்டு. அது நானோ எண்டு என்னாலை நம்பேலாமல் கிடக்கு.

அதிலை என்ரை அம்மா மட்டுமென்ன மகாராணி மாதிரி.

இப்ப அம்மாவை மாதிரிதான் என்ரை ரீச்சர் வட்ட முகம் பெரிய குங்குமப்பொட்டு கூர் மூக்கு அதிலை சின்ன மூக்குத்தி நெளிந்த தலைமயிர் நீட்டுப்பின்னல். ரீச்சரைப் பாக்கப்பாக்க பாத்துக்கொண்டே இருக்கலாம் போலை கிடக்கு ஆனால் நான் பாக்கிறது அவவுக்கு பிடிக்கேல்லை போலை என்னை ஒரு மாதிரி முறைச்சுப் பாக்கிறா?

'டேய்! என்னடா வாய் பாத்துக்கொண்டிருக்கிறாய்" ரீச்சரின் அதட்டல் வேறு

அம்மா உடுத்திற அந்தப்பச்சைச் சீலை மாதிரி ரீச்சரும் உடுத்திறவ. ஒருதரை மாதிரி ஏழு பேர் இருப்பினமாம் அப்படியெண்டா ரீச்சரும் அப்பிடியோ?

இந்தப் பொட்டையள் மட்டும் ரீச்சற் றை சீலையை பிடிச்சிழுக்குதுகள் செல் லம் கொஞ்சிப் பேசுதுகள். ரோசாப் பூக்குடுக் குதுகள். நல்லாத்தான் அவை யோடை கதைச்சுச் சிரிக்கிறா என்னை மட்டும் ஏன் முறைக்கிறா? ஏன் மற்றப்பெடியளோடையும் பரவாயில்லை.

எனக்கும் ரீச்சருக்கும் பக்கத்திலைபோய் அந்தச் சீலையை ஒருக்கா தொட்டுப் பாக்க வேணும்மாதிரி நான் அம்மான்ரை தொங்கல் சீலையை பிடித்துக்கொண்டு போயிலுக்குப் போறது அப்ப எல்லாரும் பகிடி பண்ணுவினம்.

உதென்ன ஆம்பிளைப்பிள்ளை அம்மான்ரை வாலினை பிடிச்சுக்கொண்டு எனக்கு சரியான வெக்கம் வரும் நான் முகத்தை மூடிக்கொண்டு சிணுங்குவன். ஆனால் இப்ப அதை நினைக்க எனக்கு அழவேணும் போலை இருக்கு

'சீ.....ச்சீ............. ஆம்பிளைப்பிள்ளை அழக்கூடாது" என்ரை அம்மா எனக்கு அடிக்கடி சொல்லுவா.

நான் அழுதா ரீச்சருக்கு இன்னமும் வெறுப்பு தான் வரும் அவவுக்கு என்னைப் பிடிக்கேல்லை எண்டது மட்டும் எனக்கு நல்லா விளங்குது.

சப்பாத்து பிஞ்சு போச்சு

தலைக்கு எண்ணை தண்ணி இல்லை

துப்பரவு காணாது

எழுத்து வடிவில்லை

பிந்தி வாறது

தொட்டதெல்லாத்துக்கும் பிழைபிடிச்சிட்சு சொல்கிறது தான் வேலை

கணக்கு பாடத்திலை என்னை மிஞ்சி ஒருதரும் இல்லை. இது எல்லாரும் அறிந்த விடயம். ஆனால் ரீச்சர் பக்கத்திலை வைச்சு கணக்குச் சொல்லித்தர விரும்புறேல்லை. கொப்பியை கூட ஒரு வித அருவருப்போடை தான் தொட்டுத்திருத்துவா

ஏனெண்டா வைச்செழுத மேசையில்லை பாய் விரிச்சு தான் எழுதிறது. முந்தியெண்டா அம்மா அடிக்கடி வீட்டை சாணகத்தினால் மெழுகுவா இப்ப ஆர் இருக்கினம்? அது புழுதி கிளம்பி ம்.. அப்பாவுக்கு இதெல்லாம் சரிவராது. அப்பா வீட்டை வர ஆறு மணி ஆகும். பாவம் கூலிக்கு போய் கொண்டு வாறதிலை அலுப்புக்கு கொஞ்சம் விட்டா ஆள் அடிச்சுப்போட்ட பாம்பாயிடுவார்.

பேந்து விடியத்தான் நானே சமைச்சு கையிலையும் சூடு வேண்டி .. ஆ. இப்பவும் என்ரை கையில் நெருப்புச்சுட்ட புண் விண் விண்ணென்றறு.

"டேய் என்னடா என்னட கனவே காணுறாய்" ரீச்சரின் அதட்டல் என்னை திடுக்கிட வைத்தது.

அசடு வழிய ரீச்சரின் முகத்தை நிமிர்ந்து பார்க்கிறேன் ரீச்சரின் முகத்தில் அன்று ஒரு வித புன்னகை மலர்ந்து மறைகிறது. அது கூட என்ரை அம்மா சிரிச்சமாதிரி கண்ணை வெட்டித் திறக்கிறேன்.

"பானு கணித விஞ்ஞான போட்டியிலை வலய மட்டத்தில் நீர்தான் முதலாவது நாளைக்கு அம்மாவை அல்லது அப்பாவை கூட்டிவாரும். வடிவா எல்லாம் சொல்லி விடவேணும்." ஏன்ரை பேரை ரீச்சர் செல்லுவது அன்றுதான் என நினைக்கிறேன் என்னால நம்பவே முடியவில்லை

"ரீச்சர்"

என்னை அறியாமலே இருக்கையை விட்டெழுகிறேன்

அப்பா வரமாட்டார் எனது மறுதலிப்பு ரீச்சருக்கு கோபத்தை உண்டு பண்ணியிருக்க வேண்டும் "ஏன்" ரீச்சரின் முகம் வினாக் குறியாய்

"அப்பா விடியவே வேலைக்கு போயிடுவார்".

" ஓ அப்பாக்கு நாள் முழுக்க உழைப்பு உம்மை கொஞ்சம் கவனிக்க தெரியேல்லை"

ரீச்சரின் வார்த்தையில் ஏளனம் கலந்திருக்கிறது.

"அப்ப அம்மாவை வரச்சொல்லு"

"அம்.மா " நான் எச்சிலை சிரமப்பட்டு விழுங்கி இழுக்கிறேன்

"என்ன ?அம்மாவும் வேலைக்கோ?"

"இல்லை ரீச்சர்"

"அப்ப"

"அம்மா! அது. வந்து அம்மா பிரச்சினையுக்கை". ஆதற்கு மேல் பேச எனக்கு எதுவுமே இருக்கவில்லை.

அந்தத் தசைத்துண்டுகளதும் சுற்றிலும் கேட்ட குரல்களும் என் மனதில் மீண்டும் . மீண்டும் என் கண்கள் கோடிடுகின்றன. "ஓ ! என்னட்டை இது பற்றி ஒருத்தரும்.." ரீச்சராலும் அதற்கு மேல் பேசமுடியவில்லை போலும் என் முகத்தை பார்க்கத் திராணி அற்றவராய் அங்கு மௌனம் இரட்சிக்கிறது. செருமித் தன்னை சுதாகரித்தவாறு "ஓ சரி பின்னேரம் ஏலுமெண்டா வீட்டை வாரும்"

புதுச்சேட்டு புதுக்களிசான் புதுச்சப்பாத்து கண்ணாடி இருந்தா இப்பொருக்கா என்னை பார்க்கலாம் பள்ளிக்குடம் போனேண்னா தீபன் சேரின்ரை மோட்டார் சயிக்கில் கண்ணாடியிலை எண்டாலும் கள்ளமாய் பாக்கோணும். இண்டைக்கு எல்லா பொடியளும் என்னைத்தான் பார்கப்போகினம் எனக்கு பெருமையாய் இருந்தது அம்மா இருந்தா ஒருக்கா திருஷ்டி சுத்திப் போட்டிருப்பா

இண்டைக்கு பெரிய சேராக்கள் வந்து எனக்கு பதக்கம் சூட்டப் போகினம் என் மனமெல்லாம் பூவாய் மலர்ந்தன "நீ பெரியாளாய் வருவாய்" என்ரை அம்மா இப்படித்தான் சொல்லி சொல்லி வளத்தா. ஆனால் அதை பாக்கத்தான் அம்மா இல்லை....... என் கண்கள் கோடிடுகின்றன கைக்குட்டையை எடுத்து கண்களை துடைக்கிறேன்

ஏன் தலையை பரிவாகத் தடவியவாறு " நீ கெட்டிக்காரன் எல்லாப் போட்டிகளிலையும் நீதான் முதலாவது தேசிய மட்டத்திலையும் நீ தான் முதலாவதாய் வருவாய் எனக்கு நம்பிக்கை இருக்கு."என்ரை அம்மாவே என்ரை தலையை தடவி சொன்னது போலை உணர்வு திரும்பி பார்க்கிறேன் அதே சிரிப்பு ...... அதே பார்வை ..................... அதே பரிவு ...... அம்..................... மா.............. என்னையறியாமல் என் வாய் உச்சரிக்க நான் பாதம் பணிகிறேன்.

இப்போதும் என் கண்கள் கோடிடுகின்றன. அது அழுகையல்ல ............................. ...!

இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும் பினால், இப்பத்திரிகையில் பிர சுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக் கவும்.

### சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 5

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..........................................
..........................................
சிறுகதையின் இலக்கம் : ..........................................
எழுதியவர் பெயர் : ..........................................
சிபார்சு செய்பவர் பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................
தொலைபேசி இலக்கம் : ..........................................
.......................................... ஆகிய நான்
இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

..........................
ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி
தினச்செய்தி சிறுகதைப் போட்டி
தில்லைக்கட்டி வீதி.
சுன்னாகம்.

# சமூக நல்வழி மன்றத்தின் ஸ்தாபகர் கலியபெருமாள்



பாலர் பாடசாலைகளை வெஞ்சர் 50 ஏக்கர் நியுட்டன். புரன்லோ வன ராஜா. கிளங்கன் கீ.பி. போன்ற தோட்டங்களில் நடத்தியதுடன். பாடசாலை கட்டிடங்களையும் நோர்வே தூதரகம் நிதி உதவியுடன் அமைத்து கொடுத்துள்ளார். 500ற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு அந்த காலகட்டத்தில் சேமிப்பு ஏற்படுத்தி அட்டன் நெசனல் வங்கியில் கணக்கை ஆரம்பித்து கொடுத்தார்.

வருமான பெருக்கு திட்டங்கள்.

கனடா தூதரக நிதி உதவிடனும் இலங்கை கனடா அபிவித்தி நிதியம் உதவியுடனும் தோட்டங்களுக்கு பசு மாடு வழங்கும் திட்டங்களை நடைமுறை படுத்தினார் இதில் எபோட்சிலி கிளங்கன் கீழ் பிரிவு மக்கள் பயனடைந்தனர்.

காய்கறி தோட்ட பயிற்சிகள் முறையாக அரசாங்க பயிற்சி முகாம்களில் பயிற்சியாளர்களைகொண்டு வழங்கப்பட்டது. மக்கள் தங்களது வருமானத்தை பெருக்குவதற்கு முன்னின்று செயல் பட்டனர்.

பல்கலைகழக மாணவர்களுக்கு புலமைப்பரிசில் திட்டங்களை கனடா சீடா நிதி நிறுவன உதவியுடன் தோட்டப்புற கூட்டு செயலக வழிகாட்டலுடன் வழங்கப்பட்டது. இவர்களில் பலர் தற்போது சட்டத்தரணி பொறியியலாளர், ஆசிரியர், வங்கி உத்தியோகஸ்தர்களாக காணப்படுவது குறிப்பிட தக்கது.

கலியபெருமாள் தலைமையில் 1988ம் ஆண்டு பாரம்பரிய கலைகளை ஊக்குவிப்பதற்காக ஒரு விழாவினை ஏற்பாடு செய்து அதை நோர்வூட் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடத்தியபோது. 50க்கும் மேற்பட்ட தோட்ட அமைப்புகள் பங்குபற்றியதுடன். 100க்கும் மேற்பட்டவர்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. பாரம்பரிய இசை கருவிகளும் அறிமுகம் செய்து வைத்ததோடு. அதனை இசைத்த கலைஞர்களையும் கௌரவப்படுத்தி பரிசில்களும் வழங்க ப்பட்டது.

தோட்ட மக்களின் தண்ணீர் பிரச்சனை தவிர்பதற்காக. பிரிட்டிஸ் தூதரக நிதி உதவியுடன். 100 மலசல கூடங்களையும் 20தண்ணீர் தொட்டிகளையும் அமைத்து கொடுத்துள்ளார் .இந்த பலனை எபோடஸ்சிலி, பன்மூர், நோர்வூட் கிராமம். புரன்லோ. நியூட்டன். நியூவெளி தோட்ட மக்கள் பெற்றுக்கொண்டனர்.

ஒக்ஸ்பாம் நிதி உதவியுடன் 1996ம் ஆண்டு முதல் 2010ம் ஆண்டுவரையும் 12 வருடத்திற்கு மேலாக சமூக நல்வழி மன்றம் தொடர்ந்து மக்களுக்கான பல்வேறு

**செ.தி.பெருமாள்**

சேவைகளை வழங்கியுள்ளது. இதில் மலையக பிரதேச பொறுப்பாளர் திரு. எட்வட் சந்தியாகு அவர்கள் நிறைவான பங்களிப்பினை ஆற்றியுள்ளார். ஒக்ஸ்பாம் நிதியினை வழங்கிய பவர் பவுன்டேசன் உட்பட அனைத்து நிறுவனங்களின் பணிகளுக்கும் சிறந்த ஒரு சேவையாளராக செயலபட்டார். இந்த காலகட்டத்தில் நல்வழி மன்ற ஸ்தாபகர் கலியபெருமாளுடன் இணைந்து. உப அரசாங்கசேவையாளர்கள் ,கல்வி திணைக்கழம், மாவட்ட செயலகம், மாவட்ட காய்கறி உற்பத்தி திணைக்கழம், மற்றும் பொலிஸ் பிரிவுகள் இணைந்து செயல்பட்டனர்ஃ மாணவர்கள் தட்டச்சு பயிற்சி மற்றும் கணணி பயிற்சிகளை பெற்றுக்கொண்டு நல்ல தொழில் வாய்ப்பினை பெற்றுக்கொண்டனர். இதில் 125 மாணவர்கள் பயனடைந்தனர்.

புரன்லோ. எபோடஸ்சிலி. பன்மூர். நியூவெளி போன்ற தோட்டங்களில் மக்கள் அமைப்புகளுக்காக சமூக கூடங்கள் அமைத்து கொடுக்கப்பட்டது. அத்தோடு ஒக்ஸ்பாம் நிதி உதவியுடன் வருமான பெருக்கு திட்டங்களுக்கான உதவிகள், பெண்கள் சேமிப்பு, பால்நிலை சமத்துவம் கல்வி, தலைமைத்துவ பயிற்சி போன்றவைகளும் வழங்கப்பட்டது. இந்த மக்கள் மன்றங்கள் 25இற்கு மேலானது உப அரசாங்க பிரிவில் பதிவு செய்யப்பட்டது. இவர்கள் இன்று ஏனைய அமைப்புகளுக்கு உதவி செய்வதுடன். ஒரு சில கட்டிடங்களை பிரிடோ போன்ற அமைப்புகள் பாலர் பாடசாலை நடத்துவதற்கு பயன்படுத்துகின்றனர். மக்கள் மன்றங்களின் ஏனைய சேவைகளையும் பல்வேறு அமைப்புகள் பெற்றுக் கொள்கின்றனர்.

7000இற்கு மேற்பட்ட பதிவு சான்றிதழ்கள் அரசாங்க பதிவு திணைக்களம் உதவியுடன் பிரதேச அரசாங்க பிரிவுகளுடன் இணைந்து பெற்றுக்கொடுப்பதற்காக உதவி புரிந்துள்ளார். இதில் பாடசாலை மாணவர்கள் நிறைய பயனை அடைந்தனர். நாட்டின் பிரச்சனை காலங்களில் ஒக்ஸ்பாம் நிதி நிறுவனத்தின் அனுசரனையுடன் சமாதான வேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளார் அக்கால கட்டத்தில் அமரர் முன்னாள் எம்.பி.வேலாயுதம் தலைமையிலான பவர் பவுன்டேசன். மற்றும் சில அமைப்புகள் ஒன்றிணைந்து உறவுக்கு பாலம் என்ற பெயரோடு. நாடு முழுவதும் மக்களை ஒன்றிணைக்கும் பனியில் ஈடுபட்டனர். அத்தோடு நல்லிணக்க அமைப்போடு இணைந்து இளைஞர்களுக்கான ஒன்றிணைப்பு பனிகளை மேற்கொண்டார். அந்த கால கட்டத்தில் சட்டதரணி கைலாசமூர்த்தியும் இணைந்து செயல்பட்டார்.

கடந்த கால கட்டங்களில் நாட்டின் இனப்பிரச்சனை காரணமாக மலையக இளைஞர் யுவதிகள் பாதுகாப்பு அற்ற சூழ்நிலையில் கைது செய்யப்பட்ட பொழுது அவர்களின் பாதுகாப்பு கருதி. நோர்வூட் அட்டன் பிரதேச பொலிஸ் பிரிவுகளுடன் இணைந்து அவர்களுக்கான பனிகளை ஆற்றியுள்ளார். சமாதான குழு செயலாளராக செயல்பட்டு மக்களுக்கும் பொலிசாருக்கும் இடையிலான நற்புறவுகளை வளர்த்துள்ளார்

(தொடரும்)

# மக்கள் மனம் கவர்ந்த கல்கி

சரித்திர நாவல்கள் மற்றும் சமூக நாவல்கள் என்று இரண்டு துறையிலும் இயங்கிய அவரின் நூல்கள் இன்றைக்கும் பெருமளவில் வாசிக்கப்படுகின்றன.

புத்தமங்கலத்தில் பிறந்த அவர் எஸ் எஸ் எல் சி படிக்கும் பொழுது காந்தியின் அழைப்பை ஏற்று ஒத்துழையாமை போரில் பங்குபெற தன்னுடைய படிப்பை துறந்து சிறை சென்றார்.

கல்கி முதலில் திரு விகவின் நவசக்தி இதழில் பணிபுரிந்தார். பின் ராஜாஜி அவர்களின் விமோசனம் பத்திரிக்கையை எடிட் செய்யும் பணியில் திருச்செங்கோடு காந்தி ஆசிரமத்தில் இருந்து ஈடுபட்டார். பின்னர் ஆனந்த விகடன் இதழில் இணைந்தார்.

அவரின் மனைவி கல்யாணி மற்றும் தன் பெயரை இணைத்து விஷ்ணுவின் அவதாரமான கல்கி என்பதை தன் புனைப்பெயராக சூடினார் அவர். கல்கியின் கையெழுத்து ஒரு காலத்துக்கு பிறகு எக்கச்சக்கமாக எழுதி எழுதி புரியாமல் போகிற நிலைக்கு போனது. அதனால் நகைச்சுவையாக ,"என் கையெழுத்து போகப்போக கம்போசிடருக்கும், கடவுளுக்கும் மட்டும் புரியும் படி ஆகி விட்டது !" என்பார்

எக்கச்சக்க முடிச்சுகள், ஆழ்வார்க்கடியான ,நந்தினி, சேந்தன் அமுதன் என்று கற்பனை கதாபாத்திரங்கள் இவற்றையெல்லாம் சேர்த்து அவர் தீட்டிய பொன்னியின் செல்வன் நாவல் இன்றைக்கும் புகழ் பெற்றதாக திகழ்கிறது. சமீபத்தில் நாடகமாக ஆக்கப்பட்ட பொழுது அதை பல்லாயிரம் ரசிகர்கள் கண்டு களித்தார்கள்.

சிவகாமியின் சபதம் மற்றும் பார்த்திபன் கனவு ஆகிய இரண்டு நாவல்களும் டி.கே.சி அவர்களுடன் மாமல்லபுரம் போன பொழுது மன ஓட்டத்தில் எழுந்த தாக்கத்தில் கல்கி வரைந்தார். உண்மையில் சிவகாமியின் சபதம் வானொலிக்கு நாடகமாக எழுதப்பட்டு பின்னர் நாவலானது. பார்த்திபன் கனவில் வரும் சோழ நாட்டு வீரர்களை இந்திய சுதந்திர போராட்ட வீரர்களை மனதில் கொண்டே கல்கி தீட்டினார். அவரின் பார்த்திபன் கனவே வரலாற்று நாவல்களில் அவர் எடுத்த முதல் படி.

பாரதிக்கு மணிமண்டபம் எழுப்ப அவர் எடுத்த முயற்சிகள் இன்றும் மறக்க முடியாதவை. சமூக நாவல்களிலும் தனி முத்திரை பதித்தவர் அவர். அவரின் தியாக பூமி கதை திரைப்படமாக வந்த பொழுது எக்கச்சக்க எதிர்ப்பை சந்தித்தது. படத்தில் இடம் பெற்றிருந்த தேச பக்திப் பாடல்கள், சுதந்திரப் போராட்ட காட்சிகள் காரணமாக, இந்தப் படத்துக்கு பிரிட்டிஷ் அரசு தடை விதித்தது. தடை உத்தரவு வரப்போகிறது என்பது முந்தின நாள் தெரிந்து விட்டதால், படத்தை விடிய விடிய மக்களுக்கு இலவசமாகக் காண்பிக்க, டைரக்டர் சுப்பிரமணியமும், எஸ்.எஸ். வாசனும் ஏற்பாடு செய்தனர். தியேட்டர் முழுவதும் கூட்டம் நிறைந்து வழிய, படம் இடைவிடாமல் காட்டப்பட்டது.

கல்கி கர்நாடகம் என்கிற பெயரில் எழுதிய இசை விமர்சனங்கள் புகழ்பெற்றவை. கல்கி ஆனந்த விகடன் இதழை விட்டு விலகி விடுதலைப்போரில் ஈடுபட்டு சிறை சென்றார். பின் கல்கி பத்திரிக்கையை துவங்க முடிவு செய்த பொழுது சதாசிவம் அவர்களின் மனைவி எம்.எஸ். அவர்கள் நடித்ததே மீரா திரைப்படம். அப்படத்தில் கல்கி எழுதிய பாடல் தான் காற்றினிலே வரும் கீதம் . கல்கி இதழில் அவர் தீட்டிய சரித்திர நாவல்கள் கல்கி இதழின் விற்பனையை இந்தியாவிலேயே சாதனை அளவாக எழுபதாயிரம் பிரதிகள் வரை அன்றைக்கு கொண்டு சேர்த்தது.

மது விலக்கு, சாதி ஒழிப்பு, காந்திய கொள்கைகள் என்று தன்னுடைய நாவலில் பிரசாரத்தை சேர்த்தே செய்த அவரை இன்றைக்கு இலக்கியவாதியே இல்லை என்று சொல்வோரும் உண்டு. ஆனாலும், தமிழ் நாட்டில் எல்லாரின் வாசிப்பு பட்டியலில் பொன்னியின் செல்வன் கண்டிப்பாக இல்லாமல் போகவே போகாது. எழுதப்பட்டு அறுபது ஆண்டுகள் ஆகிவிட்டாலும் இன்னமும் அதன் வசீகரம் அப்படியே இருப்பதே கல்கியின் வெற்றி தான். இன்னமும் அதை படமாக்கும் முயற்சியும் சாத்தியமாகவில்லை என்பதே அவரின் கதை சொல்லும் பாணிக்கு சான்று. கல்கி இறந்த பின் அவரின் அலையோசை நாவலுக்கு சாகித்திய அகாதமி விருது வழங்கப்பட்டது.

# விளையாட்டு

# வடக்கின் வல்லவன்-2016





தினச்செய்தியின் அனுசரனையுடன் நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம்நடத்தும் வடமாகாண வல்லவன்" தொடரில் கடந்த மாதம் 27 ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டியில் மனோகரா வை எதிர்த்து தீவகம் சென்.ஜேம்ஸ் மோதியது. போட்டியில் இரு அணிகளும் ஒரு சில கோல் பெறும் வாய்ப்புக்களைதவறவிட்ட போதும் பின் கள வீரர்களினை உடைத்து





கோல் பெற முடியவில்லை. ஆட்ட நேர முடிவில் எந்தஅணிகளும் கோல் பெறாது சமநிலையில் காணப்பட்டதால் பெனல்ரி மூலம் 3-2 என்ற கோல் கணக்கில் மனோகரா வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக மனோகரா கழக வீரர்இனியவன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பண பரிசையும் பதக்கத்தையும் கழுகுகள் கழகத்தின் மூத்த வீரரும் கழக நலன்விரும்பியும் ஆகிய . இ.ஜீவானந்தம் வழங்கி கௌரவித்தார்.

அந்தோனியார்புரம் சென். அன்ரனீஸ் உதயதாரகை ஆகியவற்றுக்கிடையேயான இரண்டாவது போட்டியில் சென். அன்ரனீஸ் கழகம் 5- 0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. சுதர்சன் ,ஜோன்சன் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்து முன்னிலைப்படுத்தினர். இடைவேளைக்குப் பின்னர் றிசிதரன், ஜோன்சன், றோமன் ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.அன்ரனீஸ் வீரர் சுதர்சன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பண பரிசையும் பதக்கத்தையும் கழுகுகள் கழகத்தின் மூத்த வீரரும் கழக நலன்விரும்யுமான . உ.பரமநாதன் வழங்கி கௌரவித்தார்.கடந்த மாதம் 26. ஆம் திகதி நடைபெற்ற முதலாவது போட்டியில் கருணாகரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய அடம்பன் ஐக்கிய விளையாட்டுக் கழகம் 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. யுஸ்ரின் , சதீஸ் ஆகியோர் முதல் பாதி ஆட்டத்தில் தலா ஒரு கோல் அடித்தனர். இரண்டாவது பாதி ஆட்டத்தில் யுஸ்ரின் மேலும் ஒரு கோல் அடித்தார்.போட்டியின் ஆட்ட நாயகனாக அடம்பன் ஐக்கிய விளையாட்டுக் கழக வீரர் யுஸ்ரின் தெரிவுசெய்யப்பட்டு அவருக்கான பண பரிசையும் பதக்கத்தையும் கழக நலன் விரும்பி த. பாலச்சந்திரன் வழங்கி கௌரவித்தார். 26.ஆம் திகதி நடைபெற்ற இரண்டாவது போட்டியில் கடைசி நிமிடத்தில் மன்னார் கில்லரி கோல் அடித்து வெற்றி பெற்றது. கரணவாய் மத்தி , மன்னார் கில்லரி ஆகியவற்றுக்கிடையேயான போட்டியில் இரு அணிகளும் கோல் அடிக்காது பரபரப்பான வேளையில் போட்டி முடிவடையும் கடைசி நிமிடத்தில் மன்னார் கில்லரி வீரர் தாசன் கோல் அடிக்க மன்னார் வெற்றி பெற்றது. போட்டியின் ஆட்ட நாயகனாக வெற்றிக் கோல் அடித்த தாசன் தெரிவு செய்யப்பட்டுஅவருக்கான பதக்கத்தையும் பணப்பரிசையும் பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் உப தைலவர் .ரா. மதியழகன் வழங்கி கௌரவித்தார்.







அல்வாய் நக்கீரன், வலப்பாடு ஜெகமீட்பர் ஆகியவற்றுக்கிடையே 31 ஆம் திகதி நடைபெற இருந்த போட்டியில் நக்கீரன் சமுகமளிக்காமையினால் வலப்பாடு ஜெகமீட்பர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டது.

மன்னார்சென்.ஜோசப் வி.க (பனங்கட்டிகொட்டு), புத்தூர் விக்னேஸ்வரா ஆகியவற்றுக்கிடையே நடைபெற்ற போட்டியில்




5-3 என்ற கோல் கணக்கில் சென்.ஜோசப் வெற்றி பெற்றது. சென்.ஜோசப் வீரர்களான ரெக்சன், ரொன்சன், லெமென்டன் . தலா ஒரு கோல் அடித்தனர். புத்தூர் விக்னேஸ்வரா வீரர் நிக்சன் பதிலுக்கு ஒரு கோல் அடிக்க முதல் பாதி ஆட்டம் முடிவுக்கு வந்தது. இரண்டாவது பாதி ஆட்டத்தில் சென்.ஜோசப் வீரர்கள் விக்னேஸ்வரா வீரர்களான அனோஜன், பானுயோபன்ஆகியோர் தலா ஒரு கோல் அடித்தனர்.போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.ஜோசப் வீரர் சிந்துஜன் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான பணப்பரிசையும் பதக்கத்தியும் கழுகுகள் கழகத்தின் மூத்த உதைபந்தாட்ட வீரரும் கழக நலன்விரும்பியுமான பொறியியலாளர்.கலாபவன் வழங்கி கௌரவித்தார்.மயிலங்காடு ஞானமுருகன் , வல்வைவிளையாட்டுக் கழகம் ஆகியவற்றுக்கிடையேயான போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் அடித்தமையினால் போட்டி சம நிலையில் முடிந்தது. பெனால்ரியில் 4-3 என்ற கோல் கணக்கில் ஞானமுருகன் வெற்றி பெற்றது. ஆட்ட நாயகனாக தெரிவு செய்யப்பட்ட ஞானமுருகன் கழக வீரர் தவரூபனுக்கு கழுகுகள் கழகத்தின் மூத்த வீரரும் கழக நலன்விரும்பியுமான. துரைராசா பணப்பரிசையும் பதக்கத்தையும் வழங்கி கௌரவித்தார்.

# ஆன்மீகம்



## அட, அப்படியா!

**மோதகப் படையல்**

திருமறைக்காடு ஆலயத்திலுள்ள வீரஹத்தி விநாயகப் பெருமானுக்கு நாள்தோறும் மாலை சந்தி வழிபாட்டின்போது மோதகம் படையலாக சமர்ப்பிக்கப்படுகிறது. இது இத்தலத்தின் சிறப்பம்சமாகும்.

**மும்மூர்த்திகள் தலம்**

தஞ்சை மாவட்டம் திருவைகாவூர் தலத்தில் வில்வவனேஸ்வரர் சுயம்பு மூர்த்தமாக அருள்புரிகிறார். துவாரபாலகர்களாக ஒருபுறம் விஷ்ணுவும், இன்னொருபுறம் பிரம்மனும் காட்சியளிக்கிறார்கள். எனவே இது 'மும்மூர்த்திகள் தலம்' என அழைக்கப்படுகிறது.

**பலிபீடத்தில் நந்தீஸ்வரர்!**

கர்நாடக மாநிலம் ஸ்ரீரங்கப்பட்டினம் நிமிஷம்பாள் ஆலயத்தில் முக்தீஸ்வரர் சந்நதியின் பலிபீடத்தில் நந்தியின் சிற்பம் பொறிக்கப்பட்டுள்ளது. தனியே நந்தி அமைவது பொது வழக்கம் என்பதால், இந்தக் காட்சி வித்தியாசமானதாகத் திகழ்கிறது.

**முருகருக்கு சிம்ம வாகனம்!**

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரிக்கு அருகிலுள்ள ஆண்டார் குப்பத்தில் முருகப் பெருமானுக்கு மயிலுடன் சிம்ம வாகனமும் உள்ளது. தன் அன்னைக்கு உரிய வாகனத்துடன் முருகன் அருள்புரிகிறார். அந்த சிம்ம வாகனமும் மயிலைத் தாங்கியபடி அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**உப்பு நிவேதனம்**

உத்திரபிரதேச மாநிலம் பெட்வா நதிக்கரையில் வருண பகவான் கோயில் அமைந்துள்ளது. இத்தலத்தில் உப்பு மட்டுமே நிவேதனம் செய்யப்படுகிறது. அதிகமாகப் பெய்யும் மழை நிற்க உப்புடன் எள் கலந்து நிவேதனம் செய்கிறார்கள். குளிர் மற்றும் பனி குறைய உப்புடன் பார்லி கலந்து நைவேத்தியம் செய்கிறார்கள்



நமக்கு சம்பந்தப்பட்டவைகளையும் நாம் செய்யும் அனைத்துக் காரியங்களையும் கடவுளுக்கு அர்ப்பணித்து விட்டால், நாம் மகிழ்ச்சியாலோ, துக்கத்தினாலோ பாதிக்கப்படாமல் மனதில் சம நிலையை அடைய முடியும்.

உறியடி உற்சவம் நடக்கும்போது பலர் கம்பத்தில் ஏறுவார்கள். பலர் வழுக்கி விழ, யாராவது ஒருவர் மட்டுமே உச்சியைத் தொடுகிறார். உச்சியை அடைந்ததால் ஏற்படும் மகிழ்ச்சி அவருக்கு மட்டுமின்றி, அவரை சுற்றியிருந்தவர்களுக்கும் ஏற்பட்டு விடுகிறது. அந்த ஒருவர் பெறும் வெற்றியை அனைவரும் தமக்கானதாக கருதி மகிழ்கிறார்கள். இதைப்போலவே, நம்மில் பூரணத்துவம் பெற்று சிறக்கும் ஒருவர் அடையும் நன்மையும் அனைவருக்கும் கிடைத்ததாகிறது.

## கோவிலுக்குச் சென்று வந்தவுடன் கால் கழுவக்கூடாது ஏன்

கோவிலுக்குச் சென்று வந்தவுடன் கால் கழுவக்கூடாது என்று சாஸ்திரம் சொல்கிறது. கோவில் என்பது கடவுள் இருக்கும் இடம். நமது பக்தியைச் செலுத்தக் கோவிலுக்குச் செல்கிறோம். இந்த உலகத்தில் பரிசுத்தமான ஓர் இடம் என்றால் அது அன்றும் இன்றும் கோவில்தான்! அந்த இடத்துக்குப் போய் அவரை தரிசனம் செய்து திரும்பும்போது கால் கழுவக் கூடாது.

கோவில் சென்று வந்த பின் நம் உடல் மனம் முழுவதும் சுத்தம் ஆன பிறகு, காலை மட்டும் ஏன் தனியே சுத்தம் செய்ய வேண்டும். எங்கேயெல்லாம் கால் கழுவ வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறதோ, அங்கேயெல்லாம் அதற்கு ஒரு காரணம் இருக்கும். பகவானின் தரிசனம் முடித்து வரும்போது நம் உடலில் எந்த அசுத்தமும் இருப்பதில்லை என்பதால், எந்தக் காரியம் செய்வதாக இருந்தாலும் சுத்தப்படுத்திக் கொள்ளத் தேவை இல்லை. தேர் இழுக்கிறோம். அங்கே ஒரு வித்தியாசமும் இல்லை. அங்கே ஒருவருக்கு ஏதோ தீட்டு இருக்கிறது என்றால் கவலையே இல்லை. தேர் வடத்தைத் தொட்ட உடனேயே எல்லாத் தீட்டும் போய் விடுகிறது. கோயிலில் இருந்து திரும்பும்போது மழை வந்துவிட்டது. சேற்றில் கால் வைத்துவிட்டீர்கள் என்றால் அப்போது கால் கழுவலாம்.



# சந்தர்ப்பவாதிகள்

## அத்தியாயம்- 5

மண்ணிற்கு மரம் பாரமா? மரத்திற்கு இலை பாரமா?

கொடிக்குக் காய் பாரமா?

பழையதொரு பாடலின் வரிகள் சரனின் ஞாபகத்தில் வந்தன. அத்தோடு புதியதொரு வரியையும் அப்பொழுது அவஉ சேஉத்துக் கொண்டாஉ.

பெற்றவருக்கு பிள்ளை பாரமா?

சரன் நல்ல பக்திமான். அவன் இல்லையென்றால் அணுவும் அசையாது என்பதில் தீவிர நம்பிக்கை கொண்டவர் கோவில் குளம் இல்லாத ஊர் ஓர் ஊரா என்று நினைப்பவஉ. என்றாலும் இந்துக் கோவில்கள் அதிகம் இல்லாத சுவிஸ் நாட்டில் எப்படியோ 29 வருடங்களைக் கழித்து விட்டவர். ஆனால் இலண்டனிலோ வட்டியும் முதலுமாக சுவிஸ் நாட்டு ஆப்பிள் மரங்களைப்போல பார்த்த இடமெல்லாம் கோவில்கள்.

அவருக்கு மிகச் சந்தோஷமாக இருந்தது.

இலண்டன் மாநகரில் இத்தனை இந்துக் கோவில்களா? தமிழர்கள் இப்படி கோவில்களை எழுப்ப அனுமதி தந்திருக்கும் ஆங்கில அரசை நன்றியுடன் அப்பொழுது நினைவுகூர்ந்தர்.

அறுபது வயது தாண்டியவர்களுக்கு இந்த அரசு இன்னொரு நல்ல வசதி செய்தி கொடுத்திருக்கின்றது .

இலவசப் பயண அட்டைதான் அது.

இலண்டனில் இந்தப்பயண அட்டையுடன் எந்த மூலைமுடுக்கிற்கும் பயணஞ் செய்யலாம். அது தொடருந்து வண்டியாக இருந்தாலென்ன பேருந்து வண்டியாக இருந்தாலென்ன நினைத்த நேரம் நினைத்த வண்டியில் ஏறிக்கொள்ளலாம் எந்தக் கட்டுப்பாடுமே இல்லை.

காலை பத்து மணியளவில் புறப்பட்டால் மாலை ஆறு மணிக்குத்தான் வீடு வந்து சேர்வார். வேலைக்குச் செல்லும் மகளும் மருமகனும் அந்த நேரந்தான் வீடு திரும்புவார்கள்.

அப்படித்தான் அன்றும் விம்பிள்டனில் உள்ள கோவிற் பூசையை முடித்துக் கொண்டு தொடருந்தில் வந்து கொண்டிருந்தபோதுதான் பெற்றவருக்கு பிள்ளை பாரமா என்ற கேள்வி மனதுள் எழுந்தது.

தன் நண்பன் சித்திரவேலின் நிலைமையை எண்ணிப் பார்த்தார். தனக்கு 3 பெண்கள் இருந்தும், மூவரையும் நல்ல இடங்களில் கட்டிக் கொடுக்க முடிந்தது தான் தினமும் கும்பிடும் தெய்வங்கள் அருளால்தான் என்று அவர் திடமாக நம்பினார் மூவருமே வெளிநாட்டில் வசதியாகத்தான் வாழ்கின்றார்கள். அவர் தேடிப்போனால் கண்கலங்காது உபசரிக்கின்றார்கள்.

இதைவிட வேறென்ன நிம்மதியும், சந்தோஷமும் ஒரு தகப்பனுக்கு வேண்டிக் கிடக்கின்றது?

ஆனால் ஓர் ஆண்பிள்ளையை மாத்திரம் பெற்ற சித்திரவேலுக்கு இந்தக் கொடுப்பனவு இல்லையே. நல்ல ஒரு குணசாலியான பெண் கிடைத்திருக்கின்றாள். கட்டிக் கொடுத்து விடலாம் என்று உற்சாகமாக ரெலிபோனில் கூறினாரே சித்திரவேல். திருப்பியனுப்பப்பட்டு வரும் மாப்பிள்ளையை பெண்வீட்டார் ஏற்பார்களா?

இலண்டன் தொடருந்துகளில் பயணிப்பவர்களுக்கு மெட்ரோ என்ற பத்திரி கை இலவசமாக வாசிக்கக் கிடைப்ப துண்டு. தன் பக்கத்து ஆசனத்தில் கிடந்த அன்றைய பத்திரிகையை எடுத்து, புதினங்களை வாசிக்க ஆரம்பித்தாஉ சரன்.

வாசிக்க முடியவில்லை. பத்திரிகை வரிகளில் மனம் லயிக்க மறுத்தது. திரும்பத் திரும்ப சித்திரவேலும், அவன் மகன் சத்தியனும் அவன் மனத்திரையில் வந்துபோனார்கள்.

ஏன் இன்று இந்த சத்தியனை பேருந்தில் சந்தித்தேன் என்றாகி விட்டது. பத்திரிகையை மடித்து பக்கத்து ஆசனத்தில் வைத்தார்.

மனம் ஒருநிலையில் இருந்தால்தானே எதையாவது வாசிக்க முடிகின்றது? மனம் எதையோ நினைத்து நொந்து கொள்ளும் போது, எப்படி, அதன் வரிகளை வாசித்துக் கிரகிக்க முடியும்?

பேருந்திலிருந்து இறங்கி நடந்து கொண்டிருந்தபோது, தங்க நிறத் தபால் பெட்டி ஒன்று தெருவில் இருப்பதைக் கண்டு வியந்தார். மகள் பிரியா சொன்ன தகவல் சட்டென ஞாபகத்திற்கு வந்தது. ஆங்கிலேயர்களது இரட்டைத் தட்டு பேருந்தும், செந்நிறத் தபாற்பெட்டியும், அவர்களது கலாச்சாரச் சின்னங்கள். இலண்டன் வரும் உல்லாசப் பயணிகள் இவற்றை எந்த வடிவிலாவது தங்கள் ஞாபகச் சின்னங்களாக வாங்கிப் போவதுண்டு.

சரி அப்படியானால் இந்தத் தங்க நிற தபால் பெட்டி எங்கிருந்து முளைத்தது? சில வருடங்களுக்கு முன்பு இலண்டன் மாநகரில் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் அரங்கேறின அல்லவா? அந்த விளையாட்டுப் போட்டிகளில் தங்கப் பதக்கத்தை வென்ற விளையாட்டு வீரர்களைக் கௌரவிக்கும் முகமாக அவரவர் பிறந்த பிரதேசங்களில் தங்க நிறம் பூசப்பட்ட தபாற்பெட்டிகள் புதிதாகக் கொண்டுவரப்பட்டன.

சரன் இப்பொழுது பார்த்தது அப்படியொன்றைத்தான். சரனுக்கு மின்னியல் சாதனங்களில் ஒரு பைத்தியம். அதிலும் ஐபோன், ஐபாட் என்றால் மிகவும் பிரியம். தபாற்பெட்டியருகே நின்றுகொண்டு, தன் ஐபோனின் உதவி கொண்டு ஒன்றுக்கு இரண்டு செல்பி எடுத்துக் கொண்டு, மேலே நடந்தா சரன்.

வயதேறிவிட்டாலும், இளமைத்தனமான ஆசைகள் இன்னமும் அவரிடம் தொற்றிக் கொண்டிருப்பதால்தான், அவரால் வயதேறிய இளைஞனாக சமூகத்தில் உலாவர முடிகின்றது.

நினைப்புத்தான் பிழைப்பைக் கெடுக்கின்றது என்பார்கள். ஒருவஉ நினைப்பிற்கு ஏற்பவே அவரர் உடல் அமைப்பு அமைந்து விடுவதுண்டு.

அன்றைய தினம் தனது மூத்த மகளிடம் செல்லவேண்டும் என்று சரன் நினைத்திருந்தார். வெறுங்கையோடு எப்படிப் போவது? அப்பிள் வாங்கிச் செல்லாம் என்ற முடிவோடு, சற்றே தள்ளியிருந்த சந்தையை நோக்கி நடந்தார்.

கார்த்தி என்ற கார்த்திகேயன் தன் அறைக் கதவைத் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தார். இப்பொழுதான் ஜேர்மனி சென்று பொருட்களை வாங்கிக் கொண்டு அவர் திரும்பியிருந்தார்.

சுவிஸ் நாட்டின் ஜேர்மன் எல்லை யில் இருக்கும் கார்த்திகேயனைப் போன்றர்கள் கொடுத்து வைத்தவர்கள். காரணம் இவர்களால் ஜேர்மனி சென்று உணவுப் பொருட்களை, உடைகளை அல்லது ஏனைய பொருட்களை மிக மலிவாக வாங்க முடிகின்றது. பிரான்ஸ் நாடும் இந்த நகர் எல்லையில்தான். ஆனால் இங்கு பொருட்களின் விலை சற்று அதிகம்.

பெரிய விலை வித்தியாசம். பொதுவாகவே சுவிட்சிலாந்து பெரிய சம்பளத்தைக் கொடுக்கும் ஒரு குட்டி நாடு. ஏனைய உலக நாடுகளோடு ஒப்பிடும்போது, கைநிறையக் கொடுக்கும் நாடுகளின் பட்டியலை எழுதினால் இந்த அல்ப்ஸ் மலை நாடு முதலிடத்தில் நிற்கும். ஆனால் பொருட்களின் விலை அதிகம். வாழ்க்கைச் செலவும் அதிகம். வலக்கையால் வாங்கும் தொகை இடக்கையால் செலவழிக்கத்தான் போதும் என்கிற அளவுக்கு யானை விலை குதிரை விலை கொடுத்துத்தான் இங்கே எதையும் வாங்க வேண்டி இருக்கின்றது.

இப்படியொரு நிலையில் கார்த்திகேயன் போன்றவர்கள், ஜேர்மனியில் பொருட்களை வாங்க முடிவது பெரிய விடயந்தான். பல பொருட்களை சுவிஸ் விலையின் அரை விலையில் வாங்கி விடலாம். குளிர்சாதனப் பெட்டியில் வைக்கப்படவேண்டியவற்றைப் பத்திரமாக வைத்து விட்டு, மெல்ல உடை மாற்றிக் கொண்டு, சோபாவில் வந்து உட்கார்ந்தபோது, காஉத்திகேயனுக்கு பெரும் ஆறுதலாக இருந்தது.

இப்பொழுது அவர் இருக்கும் இடத்தையும் ஜேர்மன் எல்லையையும் இணைத்து டிராம் சேவை தொடக்கியிருக்கின்றார்கள். நடைப்பயணம் பெரிதாகக் குறைக்கப்பட்டு விட்டாலும் , இவ்வளவு பொருட்களையும் சுமந்து கொண்டு, மூன்று டிராம்கள் மாறி அறைக்கு வந்து சேர்வதற்குள்களை வந்து விட்டது. வருடக் கணக்காகத் தொல்லை கொடுத்துக் கொண்டிருக்கும் சர்க்கரை வியாதி, 49 வயதாகி விட்ட கார்த்திகேயனைப் பாதிக் கிழவனாக்கி இருக்கின்றது. தினமும் ஊசிபோட வேண்டிய அளவு சர்க்கரை

ஏ.ஜே.ஞானேந்திரன்

வியாதி முற்றியிருக்கின்றது.

சர்க்கரை வியாதி பொல்லாத ஒன்று. நின்று கொல்லும் வியாதி. உண்ணும் எதிலுமே விழிப்போடு இருக்க வேண்டும். சர்க்கரை உடலில் குறைந்தாலும் சிக்கல். கூடினாலும் சிக்கல் ஒரே இடியப்பச் சிக்கல் தான். என்றாலும் தனக்கு விருப்பமான இனிப்புப் பண்டங்களை நேரததிற்கு நேரம் கார்த்திகேயன் சுவைக்கத் தவறமாட்டார். பியர் அருந்துவதையும் ஒழுங்கு தவறாமல் செய்பவர். அட எதுக்குக் குடிக்கிறீங்க என்று எவராவது கேட்டால், சிரித்துக் கொண்டு எதையாவது சொல்லி மழுப்பி விடுவார்.

நேரத்தை நிமிர்ந்து பார்த்தார். மணி ஏழாகி இருந்தது. இன்று சரனை ஸ்கைப்பில் அழைக்க வேண்டும் என்று நினத்தார். சரன் சுவிஸ் நாட்டில் இருந்தபோது, கார்த்திகேயன்தான் இவர் நெருங்கிய நண்பன். குளிர்சாதனப் பெட்டியிலிருந்து ஒரு பியர் ரின்னைக் கையிலெடுத்தபோது, அவர் கைத்தொலைபேசி சிணுங்கியது. யையிலெடுத்தார். தன்னை அழைப்பவர் யார் என்று பார்த்தார். கார்த்திகேயன் முகம் சட்டென இருண்டது.


[தொடரும்]

## செம்மணி வீதி வழிப்பறிக்......

(0|ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதேபோல் சாவகச்சேரியில் கடமையாற்றும் 29 வயதுடைய ஆசிரியை பாடசாலை முடிந்து தன்னுடைய வீட்டிற்கு மோட்டார் வண்டியில் செம்மணி வீதியில் வரும்போது அவரை இருவர் இடைமறித்து, அவரது 3 பவுண் தங்கச் சங்கிலியை பறித்துச் சென்று விட்டனர். பொலிஸில் முறைப்பாடு செய்தும் இது வரையில் குற்றவாளிகள் கண்டு பிடிக்கப்படவில்லை. அண்மையில் யாழ்ப்பாணத்திலிருந்து செம்மணி வீதியூடாக சாவகச்சேரி நோக்கிச் சென்று கொண்டிருந்த பெண்ணை மறித்து ஒரு பவுணுக்கு மேல் பெறுமதியான சங்கிலியை அறுத்துச் சென்றார்கள். இக் கொள்ளையில் ஈடுபடும் கோஷ்டியை இதுவரை பொலிஸார் கைது செய்யவில்லை. இக் கோஷ்டியினர் அவ் வீதியால் வரும் பெண்களை தங்கள் வாகனத்தால் இடைமறித்து அப் பெண்களின் பணம், நகை என்பவற்றைக் கொள்ளையடித்துச் செல்கின்றனர் எனத் தெரிய வருகிறது.

இவர்கள் முகம் முழுக்க மூடக் கூடிய தலைக்கவசம் அணிந்திருப்பார்கள் என்றும் இலக்கத்தகடு இல்லாத வண்டியில் வருபவர்கள் எனவும் கூறப்படுகிறது. இவ் வீதி எப்போதுமே சன நடமாட்டம் குறைந்ததாக இருப்பதனாலேயே இங்கு வழிப்பறிக் கொள்ளைகள் அதிகமாக நடைபெறுவதாகக் கூறப்படுகிறது. பொலிஸார் நல்லூர், செம்மணி, ஏ9 வீதி, கைதடிச் சந்தி வரைக்கும் நடமாடும் ரோந்து சேவை ஒன்றை செய்ய வேண்டும் என அவ்வழியே செல்பவர்கள் கருதுகின்றார்கள். முன்பு இராணுவத்தினர் ஈருருளி வண்டியில் ரோந்து சென்றதைப் போல் இப்பொழுதும் சென்றால் கொள்ளைகளைத் தவிர்க்கலாம் எ‌ன அவ் வழியே வருபவர்கள் தினச் செய்திக்குக் கூறினார்கள்.



# அல்டிமேட்ஸ்டார் அஜித்



சூப்பர் ஸ்டார் ரஜினியை எப்படி சின்ன வயசு பிள்ளைகளுக்கும், வயசான பிள்ளைகளுக்கும் பிடிக்குமோ அது போல.....

தல அஜித்தையும் ..... சினிமா உலகத்தையும் தாண்டி பொதுவா எல்லாருக்கும் பிடிக்கும். அதுவும் வாழ்க்கையில் வரிசையா கஷ்டங்களையே அனுபவிச்சுக்கிட்டு அப்பப்போ வெற்றிகளை ருசிக்கும், எவரோட உதவியும் இல்லாம, எந்த பின்புலமும் இல்லாம, தன் சுய முயற்சியால் வாழ்க்கையை அனுபவித்து வாழ்பவர்களுக்கு அஜித்தை ரொம்பவே பிடிக்கும்

அதுக்கு காரணம் அவரோட நேர்மை, நாணயம், தன்னம்பிக்கை, தோல்வியில துவண்டு விடாத வெற்றியில் மயங்கி விடாத பக்குவம், சுய விளம்பரம் இல்லாமல் செய்யும் பல வகையான உதவிகள், ....இப்படி சொல்லிக் கொண்டே போகலாம்.

எந்தவொரு சினிமாப் பின்னணியும் இல்லாமல், தமிழ்த் திரையுலகில் நுழைந்து, தனது கடின உழைப்பால் முன்னேறி,தனக்கென ரசிகர்கள் கூட்டத்தைத் தனது நடிப்பால் உருவாக்கி, அவர்கள் மனத்தில் 'தல' என்று நிலைத்திருப்பவர், அஜீத்குமார் தெலுங்குத் திரைப்படத்தில், துணைக் கதாபாத்திரத்தில் அறிமுகமாகி, பல்வேறு கதாபாத்திரங்களில் நடித்து ,தென்னிந்தியத் தமிழ்த் திரைப்பட முன்னணி நடிகர்களுள் ஒருவர் என்று முத்திரைப் பதித்த அவர், 'அல்டிமேட் ஸ்டார்'என்றும் அழைக்கப்படுகிறார். குழந்தை நட்சத்திரமாக இருந்து, நடிகையாக வளர்ந்து, அவர் நடித்த 'அமர்க்களம்' என்றபடத்தில் அவருடன் இணைந்து நடித்த பேபி ஷாலினியை மணமுடித்தார். மூன்று முறை 'ஃபிலிம்ஃபேர் விருதுகளையும்',இரண்டு முறை 'சினிமா எக்ஸ்பிரஸ் விருதுகளையும்', மூன்று முறை 'விஜய் விருதுகளையும்', இரண்டு முறை 'தமிழ்நாடுமாநில அரசு விருதுகள்', எனப் பல்வேறு விருதுகளை வென்றுள்ள அவர், ஒரு கார் பந்தய வீரராகவும் அறியப்படுகிறார்.இத்தகைய சிறப்புமிக்க 'அல்டிமேட் ஸ்டார்' அஜீத் குமார் அவர்களின் வாழ்க்கை வரலாறு மற்றும் தமிழ்த் திரையுலகில் அவர்ஆற்றிய சாதனைகள் பற்றி மேலுமறிய தொடர்ந்து படிக்கவும்.

அஜீத்,இந்தியாவில் உள்ள ஆந் திர மாநிலத்தின் தலைநகரமான ஹைதராபாத்தில், பாலக்காடு தமிழ் ஐயரானசுப்ரமணியம் என்பவருக்கும், கொல்கத்தா சிந்தி சமூகத்ததை சேர்ந்த மோகினி என்பவருக்கும் இரண்டாவது மகனாக மேமாதம் 1 ஆம் தேதி, 1971 ஆம் ஆண்டில் பிறந்தார். அவரது அண்ணனான அனூப் குமார் நியூயார்க்கில் பங்குத்தரகராகவும்,அவரது தம்பியான அணில் குமார் சியாட்டலில் பணிபுரிகிறார்.

**ஆரம்ப வாழ்க்கையும், கல்வியும்**

என்னதான் பாலக்காடு வழி தந்தைக்கும், சிந்தி தாய்க்கும் மகனாக, ஹைதராபாத்தில் பிறந்திருந்தாலும், அஜீத் தமிழ்நாட்டில் உள்ள சென்னையில் வளர்ந்தார். சென்னையில் உள்ள ஆயிரம் விளக்குப் பகுதியில் இருக்கும் ஆசான்மெமோரியல் உயர்நிலைப்பள்ளியில் தனது பள்ளிப்படிப்பைத் தொடங்கிய அவர், படிப்பின் மீது பற்றற்றவராகவேகாணப்பட்டார். இதனால், 1986ல் தனது உயர்நிலைக் கல்வியைத் தொடங்குவதற்கு முன்பே, பெற்றோர்களின்விருப்பத்தையும் எதிர்த்துத் தனது பள்ளிப்படிப்பை நிறுத்திக்கொண்டார்.

**ஆரம்பகாலப் பணிகள்**

தனது பள்ளிப்படிப்பைப் பாதியிலே கைவிட்ட அவர், ஒரு இரு சக்கர பைக் மெக்கானிக்காகப் பணியில் சேர்ந்தார். பைக், கார்ஓட்டுவதில் அதிக ஆர்வம் காட்டிய அவர், தானாகவே அவற்றை ஓட்ட கற்றுக்கொண்டு, அதற்கான உரிமத்தையும் பெற்றார்.பைக் பந்தயம் தான் தனது தொழில் பாதை என்று தேர்ந்தெடுத்த அவர், அதில் கலந்து கொள்ளப் பணம் வேண்டுமென்பதால்,அவ்வப்போது, சிறு சிறு பத்திரிக்கை விளம்பரங்கள் மற்றும் தொலைக்காட்சி விளம்பரங்களில் நடித்து வந்தார். பைக்பந்தயத்தின் போது ஏற்பட்ட காயத்தினால், அவரைப் பல வணிக முகவர்கள் அச்சு ஊடகங்களின் விளம்பரங்களில் நடிக்கவைக்க அவரைத் தூண்டினர். இதனால், அவருக்குப் பல திரைப்பட வாய்ப்புகள் குவிந்தது. 'பந்தயமா? சினிமாவா?' என்று வந்தபோது, அவர் பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணத்தினால், சினிமாவில் காலடி எடுத்து வைத்தார்.

**திரையுலக வாழ்க்கை**

1991ல், தனது 20 வது வயதில், தெலுங்குத் திரைப்படம் ஒன்றில் ஒப்பந்தமான அஜீத் , அப்படத்தின் இயக்குனர்மரணமடைந்ததால், அதில் நடிக்கும் வாய்ப்பை நழுவவிட்டார். பின்னர், ஓர் ஆண்டு கழித்து, 1992ல் 'பிரேம புஸ்தகம்'என்ற தெலுங்குத் திரைப்படத்தில் அறிமுகமானார். மேலும், அப்படம் அவருக்கு 'சிறந்த புதுமுகத்திற்கான விருதைப்'பெற்றுத்தந்தது. அதே ஆண்டில், செல்வா இயக்கத்தில், 'அமராவதி' படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. இதுவே, தமிழ்த்திரையுலகில் அவரது முதல் படமாகும். இதைத் தொடர்ந்து, அவர், 'பாசமலர்கள்' (1994), 'பவித்ரா' (1994), 'ராஜாவின்பார்வையிலே' (1995), 'ஆசை' (1995) போன்ற படங்களில் நடித்தார். இதில், 1995ல் வெளியான 'ஆசை' திரைப்படம் அவருக்குப்பெரும் திருப்புமுனையாக அமைந்ததோடு மட்டுமல்லாமல், தமிழ்த் திரையுலகில், 'வளர்ந்து வரும் நட்சத்திரம்' என்றஅந்தஸ்த்தையும் பெற்றுத் தந்தது.

இப்போது, விஷ்ணுவர்தனின் 'வலை' என்ற படத்தில் ஆர்யா மற்றும் நயன்தாராவுடன் நடித்து வருகிறார்.


**பந்தய வாழ்க்கை**

தனது இளமைப் பருவத்திலிருந்தே ரேஸ் கார், பைக் ஓட்டுவதில் ஆர்வம் காட்டி வந்த அவர், மும்பை, சென்னை, தில்லிபோன்ற இடங்களில் நடந்த கார் ரேஸ்களில் கலந்துகொண்டு வெற்றிப் பெற்றுள்ளார். மேலும் சர்வதேச அரங்கில் ரேஸ்களில்பங்கேற்கும் இந்தியர்களுள் ஒருவர் என்றும், ஃபார்முலா சாம்பியன் போட்டியில் வென்ற ஒரே இந்திய நடிகரென்றபெருமையைப் பெற்றார். ஜெர்மனி, மலேஷியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் நடந்த போட்டிகளில் கலந்துகொண்ட அவர், 2003 ஆம் ஆண்டு ஃபார்முலா ஆசியா டீஆறு சாம்பியன் ஷிப் போட்டியில் போட்டியிட்டார். அது மட்டுமல்லாமல், 2010 ஆம்ஆண்டு ஃபார்முலா 2 சாம்பியன்ஷிப் பந்தயங்களில் கலந்துகொண்ட மூன்று இந்தியர்களுள் இவரும் ஒருவர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

**இல்லற வாழ்க்கை**

1999 ஆம் ஆண்டில், சரணின் 'அமர்க்களம்' என்ற படத்தில் நடிகை ஷாலினியுடன் இணைந்து நடித்த போது, ஷாலினி மீதுஅவர் காதல் வயப்பட்டதால், ஜூன் மாதம் அவரிடம் தனது காதலைத் தெரிவித்தார். ஷ ாலினியும் இதற்குஒப்புக்கொண்டதால், இரு வீட்டார் சம்மதத்துடன் இருவரும் ஏப்ரல் மாதம் 2000 ஆம் ஆண்டில் சென்னையில் இருமதமுறைப்படி திருமண பந்தத்தில் இணைந்தனர். அவர்களது திருமணத்திற்குப் பின்னர், தனது திரையுலக வாழ்வில் இருந்துஓய்வுபெற்றார் ஷாலினி. அவர்களுக்கு, ஜனவரி மாதம் 3 ஆம் தேதி, 2008 ஆம் ஆண்டில் அனோஸ்கா என்ற மகள் பிறந்தாள்.

# நினைவு சின்னங்களை ஏலத்தில் விடுகிறார் கால்பந்து ஜம்பவான் பீலே



பிரேசில் நாட்டு உதைபந்தாட்ட ஜம்பவான் பீலே வாழ்நாளில் வென்ற பல ஞாபகார்த்த விருதுகளையும், சின்னங் களையும்,பதக்கங்களையும்,கோப்பைக ளையும் யூல்ஸ் றிமட் கோப்பை உட்பட அனைத்தையும் ஏலத்தில் விட உள்ளார்.

முதன் முதல் அவர் ஒரு தொழில் முறை கால்பந்து வீரராக ஆரம்பித்து 60 வருடங்களின் பிற்பாடு பீலே தனது சகல நினைவு சின்னங்களையும், உலக கோப்பைகளையும் வெற்றி பதக்கங்களையும் கால்பந்து பூட்ஸ்களையும் " வெற்றிக்கான தப்பித்தல்" படத்தில் போட்ட உதைபந்தாட்ட பூட்ஸ்சையும் ஏலத்தில் விட உள்ளார்.

இந்த படத்தில் பீலே சில்வஸ்ரர் ஸ்லோனுடனும் இங்கிலாந்து உதைபந்தாட்ட வீரர் சேர் பொபி மூருடனும் நடித்தார்.

இவ்வாறு தனக்கு கிடைத்த சகலத்தையும் ஏலத்தில் விடுவது என்பது கடுமையான தீர்மானம் தான். ஏன் என்று சொன்னால் இந்த தொல்பொருட்கள் எல்லாம் சீரான முறையில் எட்சன் அரட்சஸ் டோ நெசிமன்தோ Edson Arantes do nascimento பிறந்த பீலேயால் பாதுகாக்க முடியாது. இந்த ஏல விற்பனையில் உள்ள பெறுமதி வாய்ந்த பொருட்களில் ஒன்று 1970ம் ஆண்டு 3வது முறையாக பிரேஸிலுக்காக விளையாடி வென்றதுக்காக வழங்கப்பட்ட யூல்ஸ் றிமட் கோப்பையும் அடங்கும் ஆகும்.

இந்த பொருட்களை எல்லாம் யூன் 6ம் திகதி தொடக்கம் 9ம் திகதி வரை 3 நாட்கள் ஏலத்தில்விட்டு விற்பனை பொறுப்பை லண்டனில் உள்ள யூலியன் ஏல விற்பனைநிலையத்திற்கு வழங்கப்பட்து. இந்த பெறுமதி வாய்ந்த யூல்ஸ் றிமற் கோப்பை அமெரிக்கா டொலர் 6 லட்சம் பெறுமதி என்றும் மற்ற பதக்கங்கள் ஒவ்வொன்றும் அமெரிக்கா டொலர் 2 லட்சம் பெறுமதி என்றும் மதிக்கப்பட்டுள்ளது. அது மாத்திரமல்லாது பீலே சன்ரோஸ் விளையாட்டு கழகம் நியூயோக் கொஸ்மஸ்விளையாட்டு கழகம் ஆகியவற்றில் விளையாடும் போது பாவித்த சட்டைகளையும் ஏலத்தில் விடுகிறார்.

நியூயோக் கொஸ்மஸ் கழகத்தில் விளையாடும் போது அணித்த சட்டை அமெரிக்க டொலர் 10000க்கும் கொஸ்மஸ் சம்பியன்சிப்பில் வழங்கப்பட்ட மோதிரம் அமெரிக்க டொலர் 40000க்கும் 1981ம் ஆண்டு 'வெற்றிக்கான தப்பித்தல்" யூல்ஸ் அமெரிக்க டொலர் 8000 விற்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.மொத்தம் 2000 பொருட்கள் ஏலத்தில் விற்கப்படும் என்றும் இந்த பொருட்கள் அனைத்தும் அமெரிக்க டொலர்களில் 5.1 மில்லியன் பெற்று தரும் என எதிர்பார்க்கப்படுகிறது.'அனேகமாக நான் சான்டோஸ் நகரத்திற்கு சேர்த்து வைத்ததை அன்பளிப்பு செய்து விட்டேன் .இப்ப நான் எனது விசிறிகளுக்கும் அரும்பொருட்கள் சேர்ப்பவர்களுக்கும் வரலாற்று பெறுமதி மிக்க வெற்றி கிண்ணங்களை பதக்கங்கள்.கொடுக்க முன்வந்துள்ளேன்" என்று பீலே குறிப்பிட்டார்.பீலே தான் தன்னுடைய வாழ்க்கையில் மொத்தமாக 1283 கோல்களை அடித்து கிண்ணஸ் சாதனையை வைத்துள்ளார்.


மேலும் இவ்வாறு ஏலத்தில் கிடைக்கும் பணத்தின் ஒரு பகுதியை பிறேஸிலில் உள்ள வைத்தியசாலை ஒன்றுக்கு வழங்க 75 வயது நிரம்பிய பீலே திட்டமிட்டுள்ளார்.


தினச்செய்தி
என்றும் உங்களுடன்



# உயிரிழந்த சொந்தங்களுக்கு நினைவுச்சின்னம் அமைப்பது சமூகக் கடமை







உயிரிழந்த எமது சொந்தங்களுக்கு முள்ளிவாய்க்காலில் நினைவுச்சின்னம் அமைப்பது என்று தினச்செய்தி முடிவு செய்து அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றது தெரிந்தது

அதையடுத்து நினைவுச்சின்னம் அமைக்க வேண்டியது அவசியம்தானா? என்று ஒரு ஆய்வு நடாத்த தினச்செய்தி திட்டமிட்டது.

அதன் அடிப்படையில் முதல் முதலாக முள்ளியவளை முல்லைத்தீவு முள்ளிவாய்க்கால் பகுதிகளுக்குச் சென்று இந்த ஆய்வை நடத்தினோம்.

தினச்செய்தி ஆசிரியர் குழு முள்ளிவாய்க்கால் மற்றும் முல்லைத்தீவு பொதுசந்தைக்குசென்று அங்குள்ள சந்தை வியாபாரிகளிடம் இந்த ஆய்வை மேற்கொண்டது.

இந்த ஆய்வின் போது தினச்செய்தி குழுவுடன் பேசிய சகல மக்களும் இவ்வாறான ஒரு நினைவுச்சின்னம் அவசியம் என்றும் இது ஒரு சமூகக் கடப்பாடு என்றும் குறிப்பிட்டார்கள்.

நாம் தொடர்பு கொண்ட அனைவரும் உணர்வுபூர்வமாகவும் சிலர் கண்ணீர் மல்கியும் தங்கள் இழப்புகளைப் பற்றி விபரித்தார்கள்.

உயிரிழந்த தங்கள் சொந்தங்களை நினைவு கூர்வதும் பிரார்த்தனை செய்வதும் அவசியம் என்றும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வது முக்கியமான சமூகக் கடமையென்றும் கூறினார்கள்.

இந்த ஆய்வின்போது ஏராளமானோர் பங்குபற்றினார்கள்.

பிரம்மஸ்ரீ சோமசுந்தர குருக்கள்
மகாதேவ சர்மா,
மல்லாவி வவுனிக்குளம்.

பரிசுத்த தந்தை ஸ்ராணி பிலிப்ஸ்
பங்கு தந்தை கொக்குளாய். அவர் குறிப்பிடுகையில் - தூபி மாத்திரம் அமைத்தால் போதாது. தொடங்கிய பணியை தொடர்ந்து நடத்த வேண்டும் தமிழ் உணர்வை வளர்க்க வேண்டும் என்று கூறினார்.

வணக்கத்திற்குரிய ஸ்ரீ திஷ்புர குணரட்ணதேரர்.
அவர் குறிப்பிடுகையில் : யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு நினைவுத் தூபி அவசியம் அவர்களுக்காக நானும் பிரார்த்திக்கிறேன் என்றார்.

முள்ளியவளை சந்தையைச் சேர்ந்த

- தாமோதரம்பிள்ளை லோகநாயகி, வயது - 59.
- ராசையா வினோதி, வயது - 47.
- பூலோகநாயகி கணபதிபிள்ளை, வயது - 61
- எஸ். மதீஸ்வரன், வயது - 43.
- ஜெயகுமார்,வயது - 52.
- கணபதிபிள்ளை இந்துசன், வயது - 27.
- த. ராஜேஸ்வரன், வயது - 45.

முல்லைத்தீவு சந்தையைச் சேர்ந்த

- எம்.கனகலிங்கம் (ஓய்வு பெற்ற வருமான வரி பரிசோதகர்) வயது - 63.
- சாம்பசிவம் விஜிதா,வயது - 50.
- பிலோமினா பாலையா, வயது - 66.
- செபஸ்ரியாம் பிள்ளை சாந்தி, வயது - 45.
- கமலாதேவி வெள்ளிவேல், வயது - 65.
- ஐ.ரி. றிஷாம், வயது - 45.
- ஜெயகுமார் லக்ஷன்,வயது - 19.
- ஜெ.ஆர் டிக்ஷன், வயது - 63.
- அம்பிகா சந்திரகுமார்,வயது- 32.
- வேலாயுதம் நடராசா, வயது - 53.
- ரி. ஆனந்தம், வயது - 22.
- பரமாவதி முருகேசு, வயது - 20.
- வினாசித்தம்பி தெய்வானை, வயது - 67.
- செல்வகுமார், வயது - 36.
- கலைச்செல்வி அழகரத்தினம், வயது - 42.

முள்ளிவாய்க்கால் மேற்கு தன்னுடைய கணவன் ஷெல் விழுந்து இறந்ததை உணர்ச்சிபூர்வமாக கூறினார்.

- ப.சி. மணிவண்ணன், வயது - 39. தேவிபுரம் புதுக்குடியிருப்பு,
- ஜெயவண்ணன், வயது - 34. 3 ஆம் வட்டாரம் தேவிபுரம், புதுக்குடியிருப்பு.
- சின்னத்துரை பரராஜசிங்கம், வயது - 66.

முள்ளியவளை மேற்கு முன்னாள் கிராம அபிவிருத்தி தலைவர் ஆகியோர் நமது ஆய்வின்போது தமது கருத்துக்களைத் தெரிவித்துள்ளனர்.



நாவலர் பிறிண்டர்ஸ்
Naavalar Printers
Business Cards
Letterheads
Envelopes
Calendars
Catalogs
Brochures
Name Boards
Posters
CD Labels
CD Covers
Logo Creations
Hoardings
Banners
Flyers
Menu Cards
Stickers
Awards
Shields
Medals
Mug Prints
ID Cards
Tile Prints
Rubber Stamps
Duro Frames
Crystal Frames
Pointpedro Road,
5th Mail Post Kopay Centre, Kopay
T.P : 021 223 1644
021 492 7570
E-mail : navalar1023@gmail.com

இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஜூன் 04, 2016 அன்று வெளியிடப்பட்டது.